

# மீன்வளத்தில் கடல் மீன் பிடிபாட்டிலிருந்து பெறப்படும் மீன் மற்றும் மீன் பொருட்களுக்கு சூழல் அடையாள முத்திரை சீட்டு வழங்குவதற்கான வழி காட்டு முறைகள்

# மீன்வளத்தில் கடல் மீன் பிடிபாட்டிலிருந்து பெறப்படும் மீன் மற்றும் மீன் பொருட்களுக்கு சூழல் அடையாள முத்திரை சீட்டு வழங்குவதற்கான வழி காட்டு முறைகள்

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு ரோம், 2005

இவ்வெளியீட்டில் பயன்படுத்தப்பட்ட பெயர்க் குறிப்புகளும் அளிக்கப்பட்ட தகவல்களும் ஒரு நாட்டின் சட்டமுறையான தகுதிநிலை,பெருநிலப்பகுதி, நகரம் அல்லது பகுதியினை பற்றியோ, பிறநாட்டுடனான அந்நாட்டின் எல்லைக்கோடு அல்லது எல்லையை பற்றியோ, ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் சார்பாக குறிப்பாக எதுவும் சுட்டிக்காட்டப்படவில்லை.

அனைத்து உரிமைகளும் பதிப்பகத்தார்க்கே. இப்பதிப்பிலிருந்து எப்பகுதியையும் உரிமையாளரின் முன் அனுமதியின்றி, பதிப்பிடவோ, நினைவில் கொள்ள பதிப்பில் சேமிக்கவோ, புகைப்படம், மின்னணு இயந்திரவியல் அல்லது பிற வழிகளில் அனுப்புதலோ கூடாது. அத்தகைய அனுமதிக்கு நோக்கம் மற்றும் விபரம் குறித்த அறிவிக்கையுடன் இயக்குநர் தகவல் பிரிவு ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு, வியாலே, டொமே டி , காரகல்லா 00100, ரோம், இத்தாலி என்ற முகவரிக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

உவேஅ 2005

*வங்காள விரிகுடா திட்டத்தின் மூலம்*
*தமிழில் மொழிபெயர்த்து அச்சடிக்கப்பட்டது*
***2009***

*மொழிபெயர்ப்பு: டாக்டர் ம பரமசிவம்*

*Tamil translation by Dr M Paramasivam*

*Translated and Printed by the Bay of Bengal Programme*
*Inter-Governmental Organisation*
**2009**

**Bay of Bengal Programme**
**Inter-Governmental Organisation**
91, Saint Mary’s Road, Abhiramapuram,
Chennai - 600 018, Tamil Nadu, India
Tel: +91-44-24936294, 24936188; Fax: +91-44-24936102
Email: info@bobpigo.org; website: www.bobpigo.org

**ஆவணம் தயாரித்தல்**

மீன்வளத்தில் கடல் மீன்பிடிபாட்டிலிருந்து பெறப்படும், மீன் மற்றும் மீன் பொருட்களுக்கு சூழல் அடையாள முத்திரை சீட்டு வழங்குவதற்கான வழிகாட்டு முறைகளின் விளக்கத்தை இந்த ஆவணம் கொண்டுள்ளது. ரோமில் 2005 மார்ச் 7–11ல் நடைபெற்ற மீன்வளக்குழுவின் 26 வது அமர்வில் இது ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்த வழிகாட்டு முறைகளை ஏற்றுக் கொள்ளும் நேரத்தில் சில பார்வைகள் மற்றும் ஒதுக்கீடுகள் ஏற்படுத்தப்பட்டன. இவை மீவகுழுவின் அறிக்கையின் 64 முதல் 67 வரையிலான பத்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. (உவேஅ மீன்வள அறிக்கை எண். 780).

உவேஅ.

மீன்வளத்தில் கடல் மீன் பிடிபாட்டிலிருந்து பெறப்படும் மீன் மற்றும் மீன்பொருட்களுக்கு சூழல் அடையாள முத்திரை சீட்டு வழங்குவதற்கான வழிகாட்டு முறைகள்.

ரோம், உவேஅ. 2005. பக். 36.

**சுருக்கம்**

மீன்வளத்தில் கடல் மீன்பிடிபாட்டிலிருந்து பெறப்படும் மீன் மற்றும் மீன் பொருட்களுக்கு சூழல் அடையாள முத்திரை சீட்டு வழங்குவதற்கான வழிகாட்டு முறைகள் தன்னார்வமான தன்மை உடையது. சூழல் அடையாள முத்திரை சீட்டு திட்டங்களுக்கு பயன்படுத்தப்படக்கூடியது. நன்கு நிர்வகிக்கப்படும் மீன்வளத்தில் கடல் மீன்பிடிபாட்டிலிருந்து பெறப்படும் பொருட்களுக்கு முத்திரை சீட்டை மேம்படுத்தவும் மற்றும் சான்றிடுவதற்கும் ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டவை. மீன்வள ஆதாரங்களை வளம்குன்றாத வகையில் பயன்படுத்துவது தொடர்பான பிரச்சினைகளை மையப்படுத்துபவை. கொள்கைகள், பொதுவான பரிசீலனைகள், வரையறைகள் மற்றும் நிபந்தனைகள் குறைந்தபட்ச உண்மையான தேவைகள் மற்றும் ஒப்பளகுகள் மீன்வளத்தில் கடல் மீன் பிடிபாட்டிலிருந்து பெறப்படும் மீன் மற்றும் மீன் பொருட்களுக்கு சூழல் அடையாள முத்திரை சீட்டு வழங்குவதற்கான செய்முறைகள் மற்றும் நிறுவன வகைகள் ஆகியவற்றை இந்த வழிகாட்டு முறைகள் குறிப்பிடும்.

# பொருள் அடக்கம்

***பக்கம்***


மீன்வளத்தில் கடல் மீன்பிடிபாட்டிலிருந்து பெறப்படும் மீன் மற்றும் மீன் பொருட்களுக்கு சூழல் அடையாள முத்திரை சீட்டு வழங்குவதற்கான வழிகாட்டு முறைகள் ........ 7

நோக்கம் ........ 7

கோட்பாடுகள் ........ 7

பொதுவான பரிசீலனைகள் ........ 8

நிபந்தனைகள் மற்றும் வரையறைகள் ........ 9

சூழல் அடையாள முத்திரைக்கான குறைந்த பட்ச உண்மையான தேவைகள் மற்றும் ஒப்பளகுகள் ........ 12

செய்முறை மற்றும் நிறுவன வகைகள் ........ 16

**மீன்வளத்தில் கடல் மீன்பிடிபாட்டிலிருந்து பெறப்படும் மீன் மற்றும் மீன் பொருட்களுக்கு சூழல் அடையாள முத்திரை சீட்டு வழங்குவதற்கான வழிகாட்டு முறைகள்**

**நோக்கம்**

1. நன்கு நிர்வகிக்கப்படும் மீன்வளத்தில் கடல் மீன்பிடிபாட்டிலிருந்து பெறப்படும் பொருட்களுக்கு முத்திரை சீட்டை மேம்படுத்தவும் மற்றும் சான்றிடுவதற்கும் ஏற்றவாறு வடிவமைக்கப்படும் சூழல் முத்திரை திட்டங்களுக்கு இந்த வழிகாட்டு முறைகள் பயன்படுத்தப்படக்கூடியவை. மீன்வள ஆதாரங்களை வளம்குன்றாத வகையில் பயன்படுத்துவது தொடர்பான பிரச்சினைகளை மையப்படுத்துபவை.

**கோட்பாடுகள்**

2. மீன்வளத்தில் கடல் மீன்பிடிபாட்டில் சூழல் முத்திரை திட்டங்களுக்கு கீழ்க்கண்ட கோட்பாடுகள் பொருந்தும்:

2.1 கடல்சட்டத்தின் மீதான ஐக்கியநாடுகளின் மரபு 1982 மற்றும் நகராத மற்றும் பெரிதும் நகரும் மீன் இருப்புகளின் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை தொடர்பான கடல் சட்டத்தின் மீதான ஐக்கியநாடுகளின் 1982, டிசம்பர் 10 மரபின் பகுதிகள், உவேஅமைப்பின் பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பு மற்றும் உலக வர்த்தக நிறுவனத்தின் (உவநி) விதிகள் மற்றும் பிற தொடர்புடைய மற்றும் பன்னாட்டு சாதனங்களுக்கு இணக்கமாக இருத்தல்.

2.2 நாடுகளின் அதிகாரமான உரிமைகளை உணர்தல் மற்றும் அனைத்து தொடர்புடைய சட்டம் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு இணக்கமாக இருத்தல்.

2.3 தன்னார்வ தன்மையுடன் இருத்தல் மற்றும் சந்தையை நோக்கி செலுத்துதல்.

2.4 அனைத்து ஆர்வமுடைய குழுவினராலும் நன்கு பங்கு கொள்ளப்பட்டு சமமாக இருத்தலையும் சேர்த்து வெளிப்படைத்தன்மையுடன் இருத்தல்.

2.5 வேறுபாடின்றி வர்த்தகத்திற்கு [1] தேவையற்ற தடைகளைத் தோற்றுவிக்காது இருத்தல் மற்றும் நியாயமான வர்த்தகம் மற்றும் போட்டியை அனுமதித்தல்.[2]

2.6 பன்னாட்டு சந்தையில் நுழைய வாய்ப்பை வழங்குதல். [2]

2.7 திட்டங்களின் மற்றும் சான்றிடும் அமைப்புகளுக்காக பன்னாட்டு வரையறைக்கு இணங்கி தெளிவான பொறுப்பை நிறுவுதல்.

2.8 நம்பத்தகுந்த, சார்பு இல்லாத ஆய்வு மற்றும் சரிபார்க்கும் முறைகளை அமைத்தல்.

2.9 இந்த வழிகாட்டு முறைகளுடன் இணக்கமாக இருப்பின் சமமாக கருதப்படுதல்.

---

1 வர்த்தகத்தில் தொழில்நுட்ப தடைகள் மீதான உவ நிறுவனத்தின் ஒப்பந்தத்திற்கு இணக்கமாக இருத்தல்.

2 பார்க்க பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பு பத்தி. 11.2.

2.10 சிறந்த விஞ்ஞான சாட்சியத்தை அடிப்படையாகக் கொண்டிருத்தல், அதன் ஏற்புடைமை நோக்கத்துடன் சரிபார்க்கப்பட்டிருப்பின், ஆதாரங்கள் குறித்த பாரம்பரிய அறிவை கணக்கில் எடுத்துக் கொள்ளுதல்.

2.11 சரிபார்க்கக்கூடியதாக, வாழக்கூடியதாக, செய்முறைக்கு உகந்ததாக இருத்தல்.

2.12 முத்திரை சீட்டுகள் உண்மையான விபரங்களை தெரிவிப்பதை உறுதி படுத்துதல்.

2.13 தெளிவை வழங்குதல்.

2.14 இந்த வழிகாட்டு முறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்சம் குறைவான உண்மையான தேவைகள், ஒப்பளகுகள் மற்றும் செய்முறைகளை அடிப்படையாகக் கொண்டிருத்தல்.

3. அதன் நிறுவன அமைப்புகள் மற்றும் நிதி ஏற்பாடுகள் உள்ளிட்ட சூழல் அடையாள முத்திரை சீட்டு திட்டத்தின் அனைத்துப் பிரிவுகளுக்கும் வெளிப்படைத் தன்மை பற்றிய கோட்பாடு பொருந்தும்.

**பொதுவான பரிசீலனைகள்**

4. இந்த ஆவணத்தில் அமைக்கப்பட்டுள்ள கொள்கைகள், குறைந்தபட்ச உண்மையான தேவைகள், ஒப்பளகுகள் மற்றும் செய்முறைகள் ஆகியவற்றை சூழல் அடையாள முத்திரை சீட்டு வழங்கும் திட்டங்கள் கணக்கில் கொள்ள வேண்டும். இவை வளர்ந்த, இடைப்பட்ட மற்றும் வளரும் நாடுகளுக்கு சமமாக பொருந்தும்.

5. நாடுகளின் உரிமை, கடமை மற்றும் மீன்வள மேலாண்மையுடன்[3] சூழல் அடையாள முத்திரை சீட்டு திட்டங்கள் தொடர்புடையவை என்பதனை மனதில் கொள்ள வேண்டும். சூழல் அடையாள முத்திரை சீட்டு திட்டத்தில் நாடுகளின் ஈடுபாடு தீர்மானிக்கத்தக்கது என்பது உணரப்படுகிறது. இது ஊக்கப்படுத்தப்பட வேண்டும். நாடுகள் மற்றும் பொருந்தியவாறு மண்டல மீன்வள மேலாண்மை நிறுவனங்கள் (மமீவநி) இந்த வழிகாட்டு முறைகளுக்கு இணக்கமான முறையில் சூழல் அடையாள முத்திரை சீட்டு திட்டத்தை மேம்படுத்தும் என்பதும் உணரப்படுகிறது. நாடுகள் மற்றும் பொருந்தியவாறு மமீவ நிறுவனங்களின் அறிவுரை மற்றும் பரிந்துரைகளுக்கு சூழல் அடையாள முத்திரை சீட்டு திட்டங்கள் முழுமையான ஆதரவை வழங்கும்.

6. பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பு கட்டுரை 5க்கு இணக்கமாக, மற்றும் அனைத்து நாடுகளும் அதே வாய்ப்புகளைப் பெற்றுள்ளது என்பதை உணர்ந்து மற்றும் வளரும் நாடுகள் மற்றும் இடைப்பட்ட நிலையில் உள்ள நாடுகள் ஆகியவற்றிற்குப் பொருந்தும் சிறப்பான மற்றும் பன்னாட்டு மீன்வர்த்தகத்தில் அவற்றின் முக்கியமான வழங்குதல் ஆகியவற்றின் காரணத்தால், சூழல் அடையாள முத்திரை சீட்டு திட்டத்திலிருந்து பயன் பெறுவதை ஒப்புக் கொள்வதற்காக நாடுகள், தொடர்புடைய அரசிடை மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் நிதி நிறுவனங்கள் வளரும் நாடுகளுக்கு மற்றும் இடைப்பட்ட நிலையில் உள்ள நாடுகளுக்கு நிதி மற்றும் தொழில் நுட்ப உதவி வழங்க வேண்டும். உரிய மேலாண்மை ஏற்பாடுகளை மேம்படுத்தி நிர்வகிக்க உதவ வேண்டும்.

[3] இந்த வழிகாட்டு முறைகளில் நாடுகளுக்கான குறிப்பு ஐரோப்பிய சமுதாயத்தை அதன் தகுதிக்குரியவற்றில் உள்ளடக்கும்.

இத்தகைய ஏற்பாடுகள் அத்தகைய திட்டங்களில் அவை பங்கு கொள்வதை அனுமதிக்கும். அத்தகைய உதவி சான்றிடுதல் மற்றும் அதிகாரமளித்தலுக்கான உயர்ந்த செலவினத்திற்காக நேரடியாக உதவி செய்வதைப் பரிசீலிக்க வேண்டும். மேம்பாட்டு நிறுவனங்கள் மற்றும் நன்கொடை வழங்கும் நிறுவனங்கள், வளரும் நாடுகள் மற்றும் இடைப்பட்ட நிலையில் உள்ள நாடுகளுக்கு நிதி மற்றும் தொழில்நுட்ப உதவி வழங்குதலை எளிதாக்க உவேஅமைப்பிற்கு உதவ வேண்டும்.

**நிபந்தனைகள் மற்றும் வரையறைகள்**

7. இந்த பன்னாட்டு வழிகாட்டு முறைகளின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் கீழ்க்கண்ட நிபந்தனைகள் மற்றும் வரையறைகள்.

<u>அதிகாரமளித்தல்</u>

8. உரிய அங்கீகாரமுடையவர் குறிப்பானவற்றை செய்வதற்குத் தகுதியான நிறுவனம் அல்லது உரிய நபர் என்ற சாதாரணமான அங்கீகாரம் வழங்குவதற்கான முறை. *(வபநி/IEC வழிகாட்டி2: 1996, 12.11 அடிப்படையாகக் கொண்டது)*

<u>அதிகாரமளிக்கும் அமைப்பு</u>

9. அதிகாரமளிக்கும் அமைப்பு மற்றும் மான்ய அதிகாரமளித்தல் ஆகியவற்றை நடத்தி நிர்வகிக்கும் அமைப்பு.
(வபநி வழிகாட்டி 2:17:2 அடிப்படையாகக் கொண்டது.)

<u>அதிகாரமளிக்கும் முறை</u>

10. அதிகாரமளித்தலை மேற்கொள்ள மேலாண்மை மற்றும் செய்முறைகளுக்காக அதன் விதிகளைக் கொண்ட முறை.

11. குறிப்பு: சான்று அளிக்கும் அதிகார அமைப்புகளுக்கு கீழ்க்கண்ட வெற்றிகரமான மதிப்பீடு வழங்கப்படும் மற்றும் உரியவாறு கண்காணிக்கப்படுவதும் தொடரும். *(வபநி வழிகாட்டி 2, பத்தி 17.1 அடிப்படையாகக் கொண்டது)*

<u>ஏற்பாடு</u>

12. அரசு தனியார் அல்லது அரசு சாராத இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குழுவினரால் நிறுவப்படும்.

<u>ஆய்வு</u>

13. நடவடிக்கைகள் மற்றும் தொடர்புடைய முடிவுகள் திட்டமிடப்பட்ட நோக்கங்களுக்கு இணக்கமாக உள்ளதா என்பதைத் தீர்மானிக்க ஒரு முறையான மற்றும் பணியில் சார்பற்ற தேர்வு.
*(கோடெக்ஸ் அலிமெண்டேரியஸ், உணவு ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கான கொள்கைகள் சான்றிடுதல் மற்றும் ஆய்வு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது CAC/GL20)*

<u>சான்றிடுதல்</u>

14. ஒரு உற்பத்திப் பொருள், செய்முறை அல்லது சேவை குறிப்பிடப்பட்ட தேவைகளுக்காக ஒத்துப் போவதை உறுதிப் படுத்தும் முறை. இதில் மூன்றாவது நபர் எழுத்தில் அல்லது அதற்கு சரியான உறுதியை வழங்குகிறார். உரியவாறு சான்றிடுதல் வரிசையான ஆய்வு நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டது.

உற்பத்தி சங்கிலியில் ஆய்வு தொடர்வதை இது உள்ளடக்கும். *(வபநி வழிகாட்டி 2, 15.1.2 மற்றும் உணவு ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கொள்கைகளுக்காக சான்றிடுதல் மற்றும் ஆய்வு செய்தல் (CAC/GL 20 அடிப்படையாகக் கொண்டது)*

<u>சான்றிடும் அமைப்பு</u>

15. உரிய மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் சான்று இடுதலை மேற்கொள்கிறது. சான்றுஇடும் அமைப்பு, அதன் சார்பாக பிற அமைப்புகள் மேற்கொள்ளும் சான்றிடும் நடவடிக்கைகளையும் மேற்பார்வையிடுகிறது.

<u>பாதுகாப்பு சங்கிலி</u>

16. சந்தைக்கு வரும் உற்பத்தி பொருள், சூழல் அடையாள முத்திரை சின்னத்தைக் கொண்டது. உண்மையாகவே தொடர்புடைய சான்றிதழ் பெற்ற மீன்வளத்திலிருந்து பெறப்படும் உற்பத்திப் பொருள் என்பதனை உறுதிப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட முறைகளின் தொகுதி. பதப்படுத்துதல், வழங்குதல் மற்றும் சந்தை சங்கிலி ஆகியவற்றில் உற்பத்தி பொருள் வழி அடையாளம் ஆகியவற்றை இந்த முறைகள் உள்ளடக்கும். அவ்வாறே உரிய ஆவணப்படுத்துதலின் வழியையும் (மற்றும் தொடர்புடைய அளவை கட்டுப்படுத்துதலையும்).

<u>புகார்</u>

17. அதிகாரம் அளித்தல், அதிகாரத்தை அகற்றுதல், சான்றிடுதல், மற்றும் சான்றினை விலக்கிக் கொள்ளுதல் குறித்த முடிவைப் பற்றி ஒரு நபர் அல்லது அமைப்பு தோற்றுவிக்கும் மறுப்பு.

<u>இணக்கத்திற்கான மதிப்பீடு</u>

18. தொடர்புடைய தேவைகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டுள்ளதை நேரடியாக அல்லது மறைமுகமாக தீர்மானிப்பது குறித்த எந்த ஒரு நடவடிக்கை.

19. குறிப்பு: இணக்கத்திற்காக மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்கான சரியான உதாரணங்கள், மாதிரிகள் எடுத்தல், பரிசோதித்தல், மற்றும் ஆய்வு செய்தல்; மதிப்பீடு, சரிபார்த்தல் மற்றும் இணக்கத்திற்கான உறுதி (வழங்குபவரின் அறிவிக்கை, சான்றிடுதல்); பதிவு செய்தல், அதிகாரம் அளித்தல் மற்றும் ஒப்புதல் அளித்தல் அவ்வாறே அவற்றின் இணைப்புகள்). *(வபநி வழிகாட்டி 2, 12.2)*

<u>தீர்மானம்</u>

20. அதிகாரம் அளிக்கும் அல்லது சான்றிடும் அமைப்பு அல்லது ஏற்பாடு ஆகியவற்றின் நபர் அல்லது அமைப்பின் கடமை மற்றும் உரிமை தொடர்பு குறித்த தீர்மானம்.

<u>சூழல் அடையாள முத்திரை சீட்டு திட்டம்</u>

21. சூழல் அடையாள முத்திரை சீட்டு திட்டங்கள், மீன்வள உற்பத்திப் பொருள் ஒன்று குறிப்பிடத்தக்க சின்னம் அல்லது அறிக்கையை பெறும் உரிமையை அளிக்கின்றன. பாதுகாப்பு மற்றும் வளம்குன்றாத தன்மைக்கான வரையறைகளுடன் இணக்கமான முறையில் மீன் அறுவடை செய்யப்பட்டது என்பதற்கு இவை சான்று அளிக்கின்றன. சின்னம் அல்லது அறிக்கை வாங்குபவர்களால் தெரிவிக்கப்பட்ட தீர்மானங்களுக்கான பகுதிகளை வழங்குதலை நோக்கமாகக் கொண்டுள்ளது.

அவர்களின் விருப்பங்களை மீன்வள ஆதாரங்களை வளம்குன்றாத வகையில் பயன்படுத்துவதை மேம்படுத்தி தூண்டிட சார்ந்திருக்க வேண்டும்

சான்று அளித்தலுக்கான வரையறைகள்

22. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் அல்லது அமைப்பால் ஆவணம் ஒப்புதல் பெறப்பட வேண்டும். வழக்கமான மற்றும் திரும்ப திரும்ப பயன்படுத்துதல் ஆகியவற்றிற்காக உற்பத்திப்பொருள் அல்லது தொடர்புடைய செய்முறைகள் மற்றும் உற்பத்தி முறைகளுக்கு விதி முறைகள், வழிகாட்டு முறைகள் அல்லது தன்மைகள் ஆகியவற்றை ஆவணம் வழங்க வேண்டும். பன்னாட்டு வர்த்தக விதிகளின்படி இணக்கம் கட்டாயம் அற்றது. மிகவும் விரிவான முறையில் சொல்லியல், சின்னங்கள், கட்டுதல், குறியிடுதல் அல்லது அடையாள முத்திரை சீட்டிற்கான தேவைகள் போன்றவற்றை கையாள வேண்டும் அல்லது சேர்க்க வேண்டும். உற்பத்திப் பொருள் செய்முறை அல்லது உற்பத்தி முறை ஆகியவற்றிற்கு இவை பொருந்தும்.
(வதொத / ஒப்பந்தம் பிற்சேர்க்கை 1, பத்தி 2 ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது)
இந்த வழிகாட்டு முறைகளில் வேறுவகையில் தகுதிப் படுத்தப்படாத வரை, வரையறை என்ற வார்த்தை சான்றிடுவதற்கான வரையறையை மட்டுமே குறிப்பிடும். சான்றிடுதலுக்கான வரையறை, தேவைகள், ஒப்பளகுகள் மற்றும் பலதரப்பட்ட நிலைகள் உடைய ஏற்பாட்டில் நிறைவேற்றப்படும் பொருள் ஆகியவற்றை உள்ளடக்கும். ஒவ்வொரு தேவைக்கும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உண்மையான ஒப்பளகு வரையறுக்கப்பட வேண்டும். ஒவ்வொரு ஒப்பளகிற்கும் மதிப்பிடுவதில் பயன்படுத்துவதற்காக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிறைவேற்றும் பொருள் வழங்கப்பட வேண்டும்.
வரையறை அமைக்கும் நிறுவனம் அல்லது ஏற்பாடு

23. வரையறை அமைப்பதில் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கைகள் கொண்ட நிறுவனம் அல்லது ஏற்பாடு.
*(வபநி வழிகாட்டி2, பத்தி 4.3 அடிப்படையாகக் கொண்டது)*

மூன்றாவது குழு

24. கேள்விக்குரிய பிரச்சினையைப் பொறுத்தவரை ஈடுபடும் குழுவின் சார்பு இன்றி இருப்பதாக அங்கீகரிக்கப்படும் நபர் அல்லது அமைப்பு.
*(வபநி/ TEC வழிகாட்டி 2: 1996)*

சான்றிடுதலின் அலகு

25. சூழல் அடையாள முத்திரை சீட்டு கோரப்படும் மீன்வளமே ''சான்றிடுதலின் அலகு'' எங்கு ஒரு குறிப்பிட்ட மீன்பிடி சாதன வகையின் நடவடிக்கையை அல்லது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சிற்றின வகைகளைப் பிடிப்பதற்கு வழி வகுக்கும் முறைகளை குறிப்பிடுகிறதோ அங்குள்ள முழுமையான மீன்வளம்; அல்லது ஒரு மீன்வளத்தின் சார்புப்பகுதி உதாரணமாக ஒரு தேசீய மீன் பிடிகலன் பகிர்ந்து கொள்ளப்படும் சுறா இருப்புகளைப் பிடிப்பது; அல்லது அதே ஆதாரங்களில் இயக்கப்படும் பல மீன்வளங்கள் ஆகியவற்றை சான்றிடுதல் உள்ளடக்கும். ''பரிசீலனையில் உள்ள இருப்புகளிலிருந்து'' பெறப்படும் பொருட்களுக்கு மட்டுமே

சான்றிடுதல் பொருந்தும் (பார்க்க பத்தி 30) சான்றிடுதல் வரையறைகளுக்கு இணக்கமானதை மதிப்பிடுவதில் அனைத்து மீன் வளங்களின் ''பரிசீலனையில் உள்ள இருப்புகளின்'' மீதான விளைவுகள் பரிசீலிக்கப்பட வேண்டும். அனைத்து மீன் வளங்களும் அங்கு உள்ள பகுதிகளில் முழுமையாக பரவியுள்ள இருப்பு மற்றும் இருப்புகளை பயன்படுத்துகின்றன.

## சூழல் அடையாள முத்திரைக்காக குறைந்தபட்ச உண்மையான தேவைகள் மற்றும் ஒப்பளகுகள்

### முன்னுரை

26. ஒரு மீன்வளத்திற்கு சூழல் அடையாள முத்திரை சீட்டு வழங்கலாமா மீன்வளத்திற்கு சான்று அளிக்கலாமா என்பதனை மதிப்பிட குறைந்தபட்ச உண்மையான தேவைகள் மற்றும் ஒப்பளகுகளை கீழ்க்கண்ட தொகுதி வழங்குகிறது. சூழல் அடையாள முத்திரை சீட்டு திட்டங்கள் ஆதாரங்களின் வளம்குன்றாத பயன்பாடு தொடர்பான கூடுதலான அல்லது மேலும் கடுமையான தேவைகளையும் மற்றும் ஒப்பளகுகளையும் பயன்படுத்தும். கீழே வழங்கப்படும் தேவைகள் மற்றும் ஒப்பளகுகள் மீன்வளத்தை தெரிவிக்கும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பன்னாட்டு சாதனங்களின் தற்போதைய தொகுதிக்கு இணக்கமாக இருக்க வேண்டும். அதுவும் குறிப்பாக கடல் சட்டம் மீதான ஐக்கிய நாடுகளின் மரபு 1982; ஐக்கிய நாடுகளின் மீன் இருப்பு ஒப்பந்தம் 1995 மற்றும் பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பு 1995 அவ்வாறே கடல்சார் சூழல் அமைப்பில் பொறுப்பார்ந்த மீன்வளம் மீதான ரெய்க்ஜாவிக் அறிவிக்கை உள்ளிட்ட தொடர்புடைய ஆவணங்களுடன் இணக்கமாக இருத்தல் வேண்டும்.

27. மூன்று பகுதிகளின் ஒவ்வொன்றிற்கும் தேவைகள் குறிப்பிடப்பட்டுள்ளன: மேலாண்மை அமைப்புகள்; சான்றிதழ் கோரும் இருப்பு அல்லது இருப்புகள் (அடுத்து பரிசீலனையில் உள்ள இருப்பு என குறிப்பிடப்படும்) சூழல் அமைப்பு மீது மீன்வளத்தால் ஏற்படும் கடுமையான பாதிப்புகளை பரிசீலித்தல். ஒப்பளகுகள் மற்றும் தொடர்புடைய அளவிடக் கூடிய நிறைவேற்றத்தின் சுட்டிக்காட்டிகள் மற்றும் பொருத்தமான கண்காணிப்பு அமைப்பு ஆகியவை நிறுவப்பட வேண்டும். தொடர்புடைய மீன்வளம், சூழல் அடையாள முத்திரை சீட்டு திட்டத்தின் தொடர்புடைய மீன்வளம் சூழல் அடையாள முத்திரை சீட்டு திட்டத்தின் தொடர்புடைய தேவைகள் மற்றும் ஒப்பளகுகள் ஆகியவற்றுடன் இணங்கியுள்ளதா என்பதனை மதிப்பிட இது தேவைப்படும். ஒப்பளகுகளை மேம்படுத்துதல் மற்றும் பயன்படுத்துதல் மற்றும் சான்று அளித்தலின் வரையறைகளுடன் மீன்வளம் இணக்கமாக உள்ளதா என்பதை மதிப்பிடுவதில், நாடுகள், மமீவநி மற்றும் உவேஅ ஆகியவற்றின் கருத்துகள் மற்றும் எண்ணங்கள் முழுமையாக பரிசீலிக்கப்பட வேண்டும்

### மேலாண்மை அமைப்பு

28. தேவை: மேலாண்மை அமைப்பின் கீழ் மீன்பிடிப்பு மேற்கொள்ளப்படுகிறது. அமைப்பு நல்ல செயல் முறையை அடிப்படையாகக் கொண்டது. பத்தி 29ல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகள் மற்றும் ஒப்பளகுகளை திருப்தி செய்வது உறுதி செய்யப்படுகிறது. மேலாண்மை அமைப்பு மற்றும் மீன்வளம் உள்ளூர், தேசீய மற்றும் பன்னாட்டு சட்டம் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு இணக்கமாக இயங்குகிறது. இலக்கு இடப்பட்ட இருப்பை நிர்வகிக்கும் ஏதேனும் மண்டல மீன்வள மேலாண்மை அமைப்பின் தேவைகளும் இதில் அடங்கும்.

**29.** எந்த மீன்வளத்திற்கான மேலாண்மை அமைப்பிற்கும் கீழ்க்கண்ட ஒப்பளகுகள் பொருந்தும். ஆனால் குறிப்பான பரிந்துரைகளின் தேவைகள் உணரப்பட வேண்டும். இத்தேவைகள் சிறுதர மீன் வளத்திற்கு வழங்கப்பட வேண்டும். விபரங்கள் கிடைக்கும் தன்மை மற்றும் வெவ்வேறு வகையான மற்றும் அளவிலான மீன்வளத்திற்கான மேலாண்மை அமைப்புகள் உண்மையாக வேறுபடுகின்றன என்ற உண்மையைப் பொறுத்தே தேவைகள் வழங்கப்பட வேண்டும். (உ.ம். பெரிய அளவில் வர்த்தக ரீதியிலான மீன்வளம் மூலமாக சிறுதரம்)

**29.1** போதிய அளவில் விபரம் மற்றும்/ அல்லது தகவல் சேகரிக்கப்பட வேண்டும். நிர்வகிக்கப்பட வேண்டும். இருப்பின் தற்போதைய நிலை மற்றும் போக்கினை மதிப்பிட பொருந்தக்கூடிய பன்னாட்டு வரையறைகள் மற்றும் செய்முறைகளுக்கு இணக்கமாக மதிப்பிடப்படுதல் வேண்டும்.[4] (கீழே பார்க்கவும்: செய்முறை வகைகள்)

**29.2** பொருத்தமான பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகளைத் தீர்மானிப்பதில் கிடைக்கக்கூடிய சிறந்த விஞ்ஞான சாட்சியத்தை நியமிக்கப்பட்ட அங்கீகாரம் பெற்றோர் கணக்கில் கொள்ள வேண்டும். அவ்வாறே தொடர்புடைய பாரம்பரிய அறிவையும் கணக்கில் கொள்ள வேண்டும். பொருந்தக்கூடிய இடங்களில் குறிப்பிடத்தக்க இருப்பின் இலக்கு மற்றும் பார்வைக்குறிப்புகளின் வரையறை, ஆகியவற்றிற்கு தொடர்பான 'பரிசீலனையில் உள்ள இருப்பின்'[5] தற்போதைய நிலையை மதிப்பிடுவதற்காக நோக்கத்துடன் ஏற்புடைய தன்மையை சரிபார்க்க வேண்டும்.[6]

**29.3** அவ்வாறே தொடர்புடைய பாரம்பரிய அறிவு உள்ளிட்ட விபரம் மற்றும் தகவல் ஆகியவற்றின் ஏற்புடைய தன்மை நோக்கத்துடன் சரிபார்க்கப்பட்ட நிலையில், அவற்றை சூழல் அமைப்பு மீது மீன்வளத்தால் ஏற்பட்ட பாதகமான விளைவுகளை அடையாளம் காண்பதற்கு பயன்படுத்தலாம். சரியான நேரத்தில் விஞ்ஞான பூர்வமானஅறிவுரை அடையாளம் காணப்பட்ட விளைவுகளின் சாத்தியம் மற்றும் அளவுகள் மீது வழங்கப்படும். (பார்க்க பத்தி **31**)

**29.4** நியமிக்கப்பட்ட அங்கீகாரம் பெற்றோர் பரிசீலனையில் உள்ள இருப்பின் பாதுகாப்பு மற்றும் வளம்குன்றாத அளவிலான பயன்பாடு ஆகியவற்றிற்காக உரிய முறைகளைப் பின்பற்றுவர். முன்னதாகக் குறிப்பிட்டுள்ள தகவல், விபரம் மற்றும் விஞ்ஞான அறிவுரை ஆகியவற்றின் அடிப்படையில் இவை அமையும்.[7] குறைந்தகால பரிசீலனைகள் நீண்ட கால பாதுகாப்பு மற்றும் மீன்வள ஆதாரங்களை வளம் குன்றாத அளவில் பயன்படுத்துதல் ஆகியவற்றுடன் உடன்பாடு கொள்ளாது.

**29.5** உள்ளூர், தேசீய மற்றும் மண்டல அளவில் திறமையான சட்டப்படியான மற்றும் நிர்வாக அடிப்படை மீன்வளத்திற்காக நிறுவப்படுகிறது.[8] திறமையான எச்சரிக்கை கட்டுப்பாடு கண்காணிப்பு மற்றும் அமுல்படுத்துதல் இணக்கம் உறுதி செய்யப்படுகிறது. (பார்க்க பத்தி **6**).[9]

---

4 பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பு கட்டுரை 7.4.4. ன்படி

5 பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பு கட்டுரை **6.4** மற்றும் 7.4.1

6 பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பு கட்டுரை 7..5.3

7 பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பு கட்டுரை 7.1.1

8 பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பு கட்டுரை 7.7.1

9 பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பு கட்டுரை 7.1.7

29.6 பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பு கட்டுரை 7.5க்கு இணக்கமாக 'பரிசீலனையில் உள்ள இருப்பை' பாதுகாக்க முன் எச்சரிக்கை அணுகுமுறை செயல்படுத்தப்படுகிறது. *இதற்கு இடையில்* நீர்வாழ் சுற்றுப்புறத்தைக் காப்பாற்ற, உரிய விஞ்ஞான விபரம் இல்லாமையை பாதுகாத்தல் மற்றும் மேலாண்மை முறைகளைத் தள்ளிப் போடுதல் அல்லது தோல்விக்கு காரணமாக பயன்படுத்துதல் கூடாது.[10] மேலும் தொடர்புடைய நிச்சயமற்ற தன்மைகள், உரிய இடர் மதிப்பீட்டு முறைகள் மூலமாக கணக்கில் கொள்ளப்பட வேண்டும். உரிய பார்வைக் குறிப்புகள் தீர்மானிக்கப்பட வேண்டும். பார்வைக்குறிப்புகள் அணுகியுள்ளது அல்லது மிகுதியாகிவிட்டது என்று குறிப்பிடப்படும் பொழுது தீர்வு நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.[11]

**''பரிசீலனையில் உள்ள இருப்புகள்''**

30. தேவை: பரிசீலனையில் உள்ள இருப்பு அளவுக்கு அதிகமாக பிடிக்கப்படுதல் கூடாது. சிறப்பான பயன்பாட்டின் நோக்கத்தை மேம்படுத்தும் அளவில் நிர்வகிக்கப்பட வேண்டும். தற்சமயத்தில் மற்றும் வருங்கால சந்ததியினருக்கு அதன் கிடைக்கும் தன்மையை நிர்வகிக்க வேண்டும்.[12] இயற்கையான மாறுபடும் தன்மையால் மற்றும்/அல்லது பிற மீன்பிடிப்பால் ஏற்படும் விளைவுகள் ஆகியவற்றால் உற்பத்தியில் நீண்டகால மாற்றங்கள் ஏற்படும் என்பதனையும் கணக்கில் கொள்ள வேண்டும். உயிரியல் தொகுப்பு அத்தகைய இருப்பு அளவுக்கு கீழ் குறையும் நிலையில் நியாயமான கால அளவிற்குள் இருப்புகள் அத்தகைய அளவிற்கு மீட்கப்படுவதை மேலாண்மை முறைகள் (விதித்தொகுப்பு கட்டுரை 7.6) அனுமதிக்க வேண்டும்.

**சூழல் அமைப்பு பரிசீலனைகள்**

31. தேவை: சூழல் அமைப்பு மீதான மீன்வளத்தின் பாதகமான விளைவுகள் உரியவாறு மதிப்பிடப்பட்டு திறமையாக தெரிவிக்கப்பட வேண்டும்.[13] சூழல் அமைப்பு மீது இயலக்கூடிய மீன்வளத்தின் பாதிப்புகளை மதிப்பிடும் பொழுது இலக்கு இடப்பட்ட இருப்பின் நிலையை மதிப்பிடுவதைக் காட்டிலும் மிகுந்த பெரிய விஞ்ஞான பூர்வமான நிச்சயமற்ற தன்மை எதிர்பார்க்கப்படுகிறது. இடர் மதிப்பீடு/ இடர் மேலாண்மை அணுகுமுறையை மேற்கொள்வது மூலம் இப்பிரச்சினை தெரிவிக்கப்படுகிறது. சூழல் அடையாள முத்திரை சீட்டு திட்டங்களின் மேம்படுத்தும் நோக்கத்திற்காக, மிகுந்த சாத்யமான பாதக விளைவுகள் பரிசீலிக்கப்பட வேண்டும். கிடைக்கக்கூடிய விஞ்ஞான விபரங்கள், மற்றும் உள்ளூர் அறிவு ஆகியவற்றை அதன் ஏற்புடைய தன்மை நோக்கத்திற்காக சரிபார்க்கப்பட்ட நிலையில் கணக்கில் கொள்ள வேண்டும். கடுமையான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய இத்தகைய விளைவுகள் தெரிவிக்கப்பட வேண்டும். உடனடியான மேலாண்மை பதிலுரை அல்லது அடையாளம் காணப்பட்ட இடரின் கூடுதலான ஆய்வு என்ற வகையை இது மேற்கொள்ளும். இந்நிலையில் முழுமையான அங்கீகாரம் வளரும் நாடுகளில் அல்லது இடைப்பட்ட நாடுகளில் தனித்த சூழ்நிலைகளில் வழங்கப்படுதல் வேண்டும். நிதி மற்றும் தொழில் நுட்ப

---

10 பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பு கட்டுரை 7.5.1

11 பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பு கட்டுரை 7.5.2

12 பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பு கட்டுரை 7.1.1

13 பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பு கட்டுரை 7.2

உதவி, தொழில் நுட்ப மாற்றம் மற்றும் பயிற்சி மற்றும் விஞ்ஞான ஒத்துழைப்பு ஆகியவையும் இவற்றுள் அடங்கும். நாடுகளில் தனித்த சூழ்நிலைகளில் வழங்கப்படுதல் வேண்டும். நிதி மற்றும் தொழில் நுட்ப உதவி, தொழில் நுட்ப மாற்றம் மற்றும் பயிற்சி மற்றும் விஞ்ஞான ஒத்துழைப்பு ஆகியவையும் இவற்றுள் அடங்கும்.

**செய்முறை வகைகள்**

*இலக்கு இடப்பட்ட இருப்பில் தற்போதைய நிலை மற்றும் போக்கை மதிப்பிடுதல்*

32. இருப்பின் நிலை மற்றும் போக்கு ஆகியவற்றை மதிப்பிட பல வழிகள் உள்ளன. இருப்பு மதிப்பிடுதலுக்கான மிகுந்த எண்ணிக்கையில் மற்றும் விபரங்களைக் கோரும் அணுகுமுறை தேவைகளுக்கு குறைவானவை. வளரும் நாடுகளில் பெரிய அளவிலான மீன்வளங்களுக்கு வழக்கமாகப் பயன்படுத்தப்படுபவை. இருப்பு மதிப்பீட்டிற்கு குறைந்த விரிவுடைய முறைகளைப் பயன்படுத்துதல், சூழல் அடையாள முத்திரை சீட்டிற்கான சாத்யமான சான்று வழங்கும் முறையிலிருந்து மீன்வளத்தை விலக்குதல் கூடாது. எனினும் ''பரிசீலனையில் உள்ள இருப்பின்'' நிலை பற்றிய பெரிதான நிச்சய மற்ற தன்மையில் முடியும் அத்தகைய முறைகளைப் பயன்படுத்தும் எல்லைவரை, மிகுந்த முன் எச்சரிக்கை அணுகுமுறைகள் அத்தகைய ஆதாரங்களை நிர்வகிக்க தேவைப்படும். ஆதாரங்களின் பயன்பாட்டின் அளவைக் குறைப்பது அவசியமாக்கப்படும். சிறுதர அல்லது குறைந்த மதிப்புள்ள மீன்வளங்களில் வழக்கமாகப் பயன்படுத்தப்படும் வெவ்வேறான மேலாண்மை முறைகள் உள்ளன. ஆதாரத்தின் நிலையைக் குறித்த நிச்சயமற்ற தன்மையில் இருப்புக்கான பாதுகாப்பை முற்றிலும் போதிய அளவில் இவை எதுவும் நிறைவேற்றுவதில்லை.

## செய்முறை மற்றும் நிறுவன வகைகள்

### முன்னுரை

33. கிடைக்கக்கூடிய வழிகாட்டிகள் அதிலும் குறிப்பாக வரையறைக்கான பன்னாட்டு நிறுவனத்தால் ஏற்படுத்தப்பட்டவை (வபநி) ஆகியவற்றிலிருந்து பெற்று, வழிகாட்டு முறைகளின் இந்த அத்தியாயம் மூன்று முக்கிய செய்முறை மற்றும் நிறுவன வகைகளைத் தெரிவிக்கிறது. எந்தவொரு சூழல் அடையாள முத்திரை சீட்டு திட்டமும் இதனை சூழ்ந்து கொள்ளும்: (1) சான்றிடுதலுக்கான வரையறைகளை அமைத்தல், (2) சார்பற்ற சான்றிடும் அமைப்புகளுக்கு அதிகாரம் அளித்தல், மற்றும் (3) தேவையான வரையறை மற்றும் செய்முறைகளுக்கு இணங்க மீன்வளம் மற்றும் பாதுகாப்புச் சங்கிலியில் உற்பத்தி பொருள் உள்ளது என சான்றிடுதல். திட்டத்தால் பின்பற்றப்படும் நோக்கங்களை சான்றிடுதலுக்கான வரையறை உள்ளடக்கும். குறிப்பிடத்தக்க ஒப்பளகில் இது வழக்கமாகத் தெரிவிக்கப்படும். உற்பத்தி பொருள் மற்றும் / அல்லது உற்பத்தி முறைகள் மற்றும் செய்முறைகள் சான்றிதழ் பெறுவதற்கு சந்திக்க வேண்டிய ஒப்பளகுகளைத் தெரிவிக்கும்.

34. சான்றிடும் அமைப்புக்கு அதிகாரம் அளித்தலுக்கு தேவைப்படுவது அமைப்பு உரியதா, சான்றிடும் பணிக்கு திறன் பெற்றுள்ளதா என்பதனைச் சரிபார்த்தல். சான்றிடும் அமைப்பின் நடு நிலைமையை மற்றும் சார்பு அற்ற தன்மையை உறுதிப்படுத்த வேண்டும். நிறுவப்பட்ட வரையறைகளுக்கு இணங்க இருத்தலுக்கான சான்று வழங்குவதை மேற்கொள்ளும் தொழில் நுட்பம் மற்றும் நிதி தகுதி பெற்றிருக்க வேண்டும். அதே மாதிரியான தேவைகள் அதிகாரம் அளிக்கும் அமைப்பிற்கும் பொருந்தும். அதிகாரம் அளிக்கும் அமைப்பு அதிகாரம் அளிக்கும் பணிகளை மேற்கொள்ளவும் மற்றும் இப்பணிகளை நடுநிலையில் சார்பற்ற வழியில் பாரபட்சம் இன்றி நிறைவேற்றவும் தொழில் நுட்பம் மற்றும் நிதி தகுதி பெற்று இருத்தல் அவசியமாகிறது.

35. சூழல் அடையாள முத்திரை சீட்டு திட்டத்தில் மேலே குறிப்பிடப்பட்ட மூன்று படிகளின் அமைப்பு வழக்கமாக இதே மாதிரியான தொடர் வரிசையில் வழக்கமாக நடைபெறும். இது காரணமாக (2) அதிகாரம் அளித்தல் மற்றும் (3) சான்று இடுதல் ஒரு முறை நிறுவப்பட்ட திட்டத்தின் வழக்கமான நடவடிக்கைகளாக இருக்கும். வழக்கமான ஆனால் நீண்டகால இடைவெளியில் இத்திட்டம், அனுபவம் மற்றும் புதிய அறிவிற்காக சான்றிடுதலுக்கான வரையறையை ஆய்வு செய்து திருத்தும்.

### அமைப்பு

36. செய்முறைக்கான வழிகாட்டு முறைகள் கீழ்க்கண்டபடி மூன்று பகுதிகளாக வழங்கப்படுகின்றன.

**1) வளம்குன்றாத மீன்வளத்திற்கான வரையறைகளை அமைக்க வழிகாட்டு முறைகள் 2) அதிகாரம் அளிதலுக்கான வழிமுறைகள் மற்றும் 3) சான்றிடுதலுக்கான வழிகாட்டு முறைகள்** இந்த மூன்று பகுதிகளின் ஒவ்வொன்றும் மேலும் 4 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன: 1) நோக்கம் 2) குறித்தநிலைக்கு கொண்டு வருதலுக்கான பார்வை 3) பணி மற்றும் அமைப்பு; மற்றும் 4) தேவைகள். தேவைகள் என்பது மிகக்குறைந்த பட்ச தேவைகள் ஆகும். ஒரு அமைப்பு, நபர் அல்லது ஏற்பாடு, அதன் பகுதியில் உகந்தது மற்றும் நம்பத்தகுந்தது என்பதாக அங்கீகரிக்கப்படுவதற்கு எதிர் கொள்ள வேண்டிய

தேவைகள் ஆகும். இந்த வழிகாட்டு முறைகளில் ஏற்கனவே பட்டியலிடப்பட்ட கொள்கைகள் கடல்சார் மீன்பிடிப்பில் சூழல் அடையாள முத்திரை சீட்டு திட்டத்தின் செய்முறை மற்றும் நிறுவன வகைகளுக்கு சரிசமமாக பொருந்தும்.

**கட்டுப்பாட்டு அமைப்பிற்கான தேர்வுகள்**

37. சூழல் அடையாள முத்திரை சீட்டு திட்டத்தின் கட்டுப்பாட்டிற்காக வெவ்வேறு தேர்வுகள் உள்ளன. திட்டத்தின் தொடக்கம் அரசு அரசிடை நிறுவனம், அரசு சாரா நிறுவனம் அல்லது தனியார் தொழிற் சங்கம் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றால் மேற்கொள்ளப்பட வேண்டும். திட்டத்தின் பூகோள எல்லைக்காக வெவ்வேறு தேர்வுகள் இருக்கும் நோக்கத்தில் இது தேசீய, மண்டல அல்லது பன்னாட்டு அளவில் இருக்கும்.

38. திட்டத்தின் உரிமைதாரர் நேரடியாக அதன் இயக்க விவகாரங்களில் ஈடுபடுவது அவசியமானது அல்ல. இவை நிறுவனம் ஒன்றால் அல்லது இந்த நோக்கத்திற்காக அமைக்கப்பட்ட ஏற்பாட்டினால் கையாளப்படலாம். இது பொதுத்துறை அரசு சாராத அல்லது தனியாருக்கானதாக இருக்கலாம். சூழல் அடையாள முத்திரை சீட்டு ஏற்பாடு அல்லது அமைப்பு இயங்குவதற்கு தேவைப்படும் விதிமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகளை இந்த திட்டத்தின் உரிமைதாரர் வடிவமைக்கலாம். ஒரு குறிப்பிட்ட பிரிவிற்காக (உ.ம். மீன்வளம்) இந்த அமைப்பு ஒரு சூழல் அடையாள முத்திரை சீட்டு திட்டத்தை செயல்படுத்தலாம் அல்லது வெவ்வேறு பிரிவுகளுக்காக பொறுப்புகளைப் பெற்று இருக்கலாம் (துணி; காகிதம்; போன்றவை)

39. சூழல் அடையாள முத்திரை சீட்டு திட்டத்தின் உரிமைதாரர் தனியாக சார்பு அற்ற சிறப்பு பெற்ற அதிகாரம் அளித்திடும் அமைப்பை ஈடுபடுத்த வேண்டும். அதன் சார்பாக சான்றிடும் அமைப்புகளுக்கு அதிகாரம் அளிக்கும் பணியை அது மேற்கொள்ளும். அதிகாரம் அளித்திடும் அமைப்பு தனியானது அல்லது பொதுத்துறை அல்லது பொதுப்பணி விதிகளுக்குட்பட்ட தன்னாட்சி அமைப்பாக இருக்கும்.

**வளம்குன்றாத மீன்வளத்திற்கான வரையறைகளை அமைப்பதற்கான வழிகாட்டு முறைகள்**

**நோக்கம்**

40. மீன்வளத்தில் கடல் மீன்பிடிபாட்டிலிருந்து வளம்குன்றாத வகையில் பெறப்படும் பொருளின் எந்த ஒரு சூழல் அடையாள முத்திரை சீட்டு திட்டத்தின் பணிகளில் வரையறை அமைத்தல் மிகவும் கடினமானதாகும்; வரையறைகள் திட்டத்தால் பின்பற்றப்படும் வளம்குன்றாத மீன்வளத்தின் நோக்கங்களை பிரதிபலிக்க வேண்டும். மீன்வளத்தின் கட்டுப்பாட்டு அமைப்பு அல்லது மேலாண்மை அமைப்பின் தரம் மற்றும் எண்ணிக்கையை குறிப்பிடும் சுட்டிக்காட்டிகளையும் வரையறைகள் உள்ளடக்க வேண்டும். அவ்வாறே அதன் வெளிப்பாட்டை வளம்குன்றாத வகையிலான மீன்வளம் மற்றும் கடல்சார் மீன்வள ஆதாரங்கள் மற்றும் தொடர்புடைய சூழல் அமைப்பு ஆகியவற்றின் பாதுகாப்பு என்ற வகையில் உள்ளடக்க வேண்டும்.

41. வரையறைகள் உலக அளவிலான சந்தைகளை உருக்குலையைச் செய்தல் கூடாது. பன்னாட்டு வர்த்தகத்திற்கு தேவையற்ற தடைகளை தோற்றுவித்தல் கூடாது.

**குறித்த நிலைக்கு கொண்டு வருதலுக்கான அடிப்படை**

42. வளம்குன்றாத மீன்வளத்தின் வரையறைகளின் குறித்த நிலைக்கு கொண்டு வருதலுக்கான அடிப்படை பன்னாட்டு மீன்வள சாதனங்களால் வழங்கப்பட்டுள்ளன மற்றும் தேசீய சட்டத்திற்கு பயன்படுத்தக்கூடியவை. *இதற்கு இடையில்* தொடர்புடைய பன்னாட்டு மீன்வள சாதனங்கள் உள்ளடக்குபவை, கடல் சட்டம் மீதான ஐக்கியநாடுகளின் மரபு (1982), 1995 ஐக்கிய நாடுகளின் மீன் இருப்பு ஒப்பந்தம் மற்றும் 1995 பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பு.

43. செய்முறை சொற்களில் வரையறுக்கப்பட்ட மேம்பாட்டிற்காக குறித்த நிலைக்கு கொண்டு வருதலுக்கான அடிப்படையில் கீழ்க்கண்டவை உள்ளடக்கப் படுகின்றன:

- வபநி/ IEC வழிகாட்டி 59 *வரையறுத்தலுக்கான சிறந்த செய்முறை விதித்தொகுப்பு* 1994.
- உவநி/ வதொத, பிற்சேர்க்கை 3 *வரையறைகள் தயாரித்தல், பின்பற்றுதல் மற்றும் பயன்படுத்துதலுக்கான சிறந்த செய்முறை விதித்தொகுப்பு.*
- உவேஅ. 1998. மீன்வளத்தில் கடல் மீன்பிடிபாட்டிலிருந்து பெறப்படும் பொருட்களுக்கு சூழல் அடையாள முத்திரையிடுதலுக்கான பாகுபாடு அற்ற தொழில்நுட்ப வழிகாட்டு முறைகளை மேம்படுத்துவதற்கான சாத்யம் மீது நடைபெற்ற தொழில் நுட்ப கலந்தாய்வின் அறிக்கை, ரோம், இத்தாலி, 21–23 அக்டோபர் 1998. *உவேஅ மீன்வள அறிக்கை* எண். 594.
- ISEAL.*PO 20 ISEAL மீதான வழிகாட்டுதல் சமூக மற்றும் சுற்றுப்புறம் குறித்த வரையறைகளை அமைப்பதற்கான சிறந்த செய்முறை விதித்தொகுப்பு.* பொதுவரைவு. ஜுலை 2003.
- ISEAL *வரையறை அமைக்கும் செய்முறைகளுக்கான தன்னார்வ முறை மற்றும் உற்பத்தி ஆகியவற்றிகான சிறந்த செய்முறை விதித்தொகுப்பு.* பொது வரைவு மார்ச் 1, 2003.

**நிறுவன அமைப்பு மற்றும் பணிகள்**

44. வரையறைகளை அமைத்தல், மதிப்பிடுதல் திருத்தி அமைத்தல், ஆய்வு செய்தல் சரிபார்த்தல் மற்றும் ஒப்புதல் அளித்தல் ஆகிய பணிகள் வரையறை அமைக்கும் நிறுவனம் அல்லது ஏற்பாட்டிற்கு ஒதுக்கப்படும். இப்பணிகள் தனிச்சிறப்பு வாய்ந்த வரையறை அமைக்கும் நிறுவனம் அல்லது பிற பொருத்தமான ஏற்பாடு மூலமாக நிறைவேற்றப்படும்.

45. வரையறை அமைக்கும் நிறுவனம் இல்லாத இடங்களில் வரையறை அமைக்கும் ஏற்பாட்டின் நிறுவன அமைப்பு *இதற்கு இடையில்* தனித்த வல்லுநர்கள் அடங்கிய தொழில்நுட்ப குழு மற்றும் கலந்தாய்வு அமைப்பை சேர்க்க வேண்டும். அவற்றின் கடமைகளை நிறுவ வேண்டும்

**தேவைகள்**

<u>வெளிப்படைத்தன்மை</u>

46. வரையறைகளை மேம்படுத்துவதில் வெளிப்படைத்தன்மை மிகவும் அவசியமானது. தொடர்புடைய பன்னாட்டு வரையறைகளுக்கு இணக்கமாக இருத்தலை

உறுதிப்படுத்துதல் உத்திரவாதம் வழங்குதல், சென்று அடைதல் மற்றும் அனைத்து ஆர்வமான குழுவினரின் பங்கு கொள்ளுதல் குறிப்பாக வளரும் நாடுகள் மற்றும் இடைப்பட்ட நாடுகளின் குழுவினர் பங்கு கொள்ளுதல் ஆகியவற்றை எளிதாக்குவதற்கு அவசியமானது.

47. வரையறை அமைக்கும் நிறுவனங்கள் அல்லது ஏற்பாடுகள் அவற்றின் நடவடிக்கைகளை வெளிப்படையான முறையில் மேற்கொள்ள வேண்டும். செய்முறைகளில் எழுதப்பட்டுள்ள விதிகளைப் பின்பற்ற வேண்டும். வரையறை அமைப்பதை கையாள்வதில் எந்த ஒரு உண்மையான அல்லது செய்முறைகளில் தகராறு ஆகியவற்றின் மீதான பாரபட்சமற்ற தீர்மானத்திற்காக நுட்பம் ஒன்றை செய்முறை விதிகள் கொண்டிருக்க வேண்டும்.

48. வரையறை ஒன்றை ஏற்படுத்த, திருத்தி அமைக்க ஆய்வு செய்ய முடிவு எடுக்கப்பட்ட நேரத்திலிருந்து , அந்தவரையறை பின்பற்றப்படும் வரை வரையறை தயாரிப்பில் உள்ளது (ஆய்வில் அல்லது திருத்தி அமைப்பதில் உள்ளது)

49. ஒரு வரையறை பின்பற்றப்படுவதிலிருந்து அது உரியவாறு வெளியிடப்பட வேண்டும். வலைத்தளத்தில் கிடைக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

50. குறைந்தது ஆறு மாதங்களுக்கு ஒரு முறையேனும் வரையறை அமைக்கும் நிறுவனம் அல்லது ஏற்பாடு ஒரு செயல்திட்டத்தை வெளியிட வேண்டும். அதில் கீழ்க்கண்டவை குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்:

- அதன் பெயர்;
- அதன் முகவரி;
- தற்சமயம் தயாரிப்பில் உள்ள வரையறைகளின் பட்டியல்;
- தற்சமயம் ஆய்வு அல்லது திருத்தப்படும் வரையறைகளின் பட்டியல்;
- இதற்கு முந்தைய காலத்தில் பின்பற்றப்பட்ட வரையறைகளின் பட்டியல்.

51. தற்போதுள்ள பணி திட்டம் பற்றிய அறிவிப்பு வெளியிடப்பட வேண்டும். வரையறை நடவடிக்கைகளை வெளியிடும் தேசீய அல்லது, மண்டல அல்லது பன்னாட்டு வெளியீட்டில் வெளியிட வேண்டும் மற்றும்/ அல்லது இயன்ற அளவிற்கு வலைத்தளத்தில் கிடைக்கும்படி செய்தல் வேண்டும்.

52. எந்த ஒரு ஆர்வமான குழுவும் கேட்கும் பொழுது வரையறுக்கும் அமைப்பு அல்லது ஏற்பாடு வரையறை அமைக்கும் முறைகள் மிகவும் சமீபத்திய பணி திட்டம் வரையறைகளின் வரைவு அல்லது இறுதியான வரையறை ஆகியவற்றின் நகலை உடனடியாக வழங்க வேண்டும் அல்லது வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

53. கேட்கப்படும் பொழுது வரையறை அமைக்கும் முறைகள், மிகவும் சமீபத்திய பணி திட்டம், வரையறைகளின் வரைவு அல்லது இறுதியான வரையறை ஆகியவற்றை ஆங்கிலம், பிரெஞ்சு மற்றும் ஸ்பானிஷ் மொழிகளில் மொழி பெயர்த்து வழங்கப்பட வேண்டும். வரையறை அமைக்கும் நிறுவனம் அல்லது ஏற்பாடு என்ற அளவில் இவை வழங்கப்பட வேண்டும்.

<u>ஆர்வமான குழுவினர் பங்கு பெறுதல்</u>

54. வரையறை அமைக்கும் ஏற்பாடுகள் அல்லது நிறுவனங்கள் தனிப்பட்ட தொழில் நுட்ப வல்லுநர்கள் மற்றும் ஆர்வமான குழுவினரின் பிரதிநிதிகள் ஆகியோர்

சமநிலையான முறையில், வரையறை மேம்பாடு, திருத்தி அமைத்தல் மற்றும் ஒப்புதல் முறைகளில் பங்கு கொள்வதை உறுதி செய்ய வேண்டும். வளம்குன்றாத மீன்வளத்திற்கான வரையறைகளின் மேம்பாடு இயலும் இடங்களில், மீன்வள மேலாண்மை அங்கீகாரம் பெற்றவர்களின் பிரதிநிதிகள், மீன்பிடி தொழில், மீன்பிடி தொழிலாளர் அமைப்புகள், விஞ்ஞான குழு, சுற்றுப்புற ஆர்வமுடைய குழுக்கள், மீன்பதனிடுவோர், வர்த்தகர்கள், சில்லறை வியாபாரிகள் அவ்வாறே உபயோகிப்பாளர் அமைப்புகள் ஆகியவற்றின் பிரதி நிதிகளையும் சேர்க்க வேண்டும்.

**55.** உரிய கலந்தாய்வு அமைப்பு மூலமாக அல்லது அவை பங்கு கொள்ளும் உரிய மாற்று நுட்பம் மூலமாக உணரச் செய்து ஆர்வமான குழுவினர் வரையறை அமைக்கும் பணிகளில் இணைக்கப்பட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட அமைப்புகள் நியமிக்கப்படும் இடங்களில், அவர்களுக்கு பொருந்தக் கூடிய ஒத்துழைப்பு தேவைகள் தீர்மானிக்கப்பட வேண்டும்.

**56.** வரையறுக்கும் ஏற்பாடுகள் அல்லது நிறுவனங்கள் தீர்மானம் மேற்கொள்வதற்கு வழிகாட்டுவதற்காக எழுதப்பட்ட செய்முறைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

<u>அறிவிக்கை ஏற்பாடுகள்</u>

**57.** ஒரு வரையறையைப் பின்பற்றுவதற்கு முன், வரையறை செய்யும் அமைப்பு அல்லது ஏற்பாடு வரையறை வரைவு மீது ஆர்வமுள்ள குழுவினர் கருத்து தெரிவிக்க 60 நாட்கள் கொண்ட காலக்கெடு அனுமதிக்க வேண்டும். கருத்து தெரிவிக்கும் காலம் தொடங்குவதற்கு பிந்தாத வகையில் வரையறை செய்யும் அமைப்பு அல்லது ஏற்பாடு அறிவிப்பு ஒன்றை வெளியிட வேண்டும். தேசீய அல்லது ஏற்றபடி மண்டல அல்லது வரையறை நடவடிக்கைகளை பன்னாட்டு அளவில் வெளியீடு மற்றும் / அல்லது வலைத்தளம் வழியாக கருத்துரை கூறவேண்டிய காலத்தை அறிவிக்க வேண்டும்.

**58.** வரையறை செய்யும் அமைப்பு அல்லது ஏற்பாடு வரையறையை மேலும் உருவாக்குதல், கருத்து வழங்க கோரப்பட்ட காலத்தில் பெறப்பட்ட கருத்துகள் ஆகியவற்றை கணக்கில் கொள்ள வேண்டும். தொடர்புடைய தேசீய அல்லது பன்னாட்டு வரையறைகளிலிருந்து விலகிச் செல்லுதலுக்கான தேவை ஏன் என்பதற்கான விளக்கத்தை பதில் கொண்டிருக்க வேண்டும்.

<u>ஆவணங்களைப் பாதுகாப்பாக வைத்திருத்தல்</u>

**59.** வரையறைகள் மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கான உரிய ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு நிர்வகிக்கப்பட வேண்டும். வரையறை செய்யும் அமைப்பு அல்லது ஏற்பாடு வரையறை தொடர்பான விசாரணைகளுக்காக மற்றும் கருத்துக்களை சமர்ப்பிப்பதற்காக மையப்பகுதி ஒன்றை அடையாளம் காண வேண்டும். வலைத்தளம் உள்ளிட்ட வழிகளில் இந்த மையத்தை தொடர்பு கொள்வதற்கான விபரங்கள் எளிதாகக் கிடைக்க வேண்டும்.

<u>வரையறைகள் மற்றும் வரையறை அமைக்கும் முறைகளை ஆய்வு செய்தல் மற்றும் திருத்தி அமைத்தல்</u>

**60.** வழக்கமான வெளியிடப்படும் இடைவெளியில் வரையறைகள் ஆய்வு செய்யப்பட வேண்டும். பொருந்தும் எனில் அத்தகைய ஆய்வுகளைத் தொடர்ந்து திருத்தி அமைக்க வேண்டும். திருத்தி அமைக்கப்பட்ட வரையறைகளுடன் இணக்கம் கொள்வதற்கு சான்றிடப்படும் மீன்வளத்திற்கு குறைந்தது மூன்று வருடகால அவகாசம் வழங்க வேண்டும்

61. எந்த ஒரு ஆர்வமான குழுவும் திருத்தி அமைக்க கருத்துருக்களை சமர்ப்பிக்கலாம். இணக்கமான மற்றும் வெளிப்படைத்தன்மை கொண்ட முறை மூலமாக வரையறை அமைக்கும் அமைப்பு அல்லது ஏற்பாடு இவற்றைப் பரிசீலிக்க வேண்டும்.

62. வரையறை அமைப்பதற்காக செய்முறை மற்றும் செயல்முறை அணுகுமுறை விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப வரையறை அமைத்தலில் பெறப்பட்ட அனுபவம் ஆகியவற்றின் நோக்கில் அன்றைய தேதி வரை சரிப்படுத்தப்பட வேண்டும்.

<u>வரையறைகளை செல்லத்தக்க தாக்குதல்</u>

63. வரையறைகளை மேம்படுத்துதல் மற்றும் திருத்தி அமைத்தலில் நேருக்கு நேர் வரையறையை இந்த வழிகாட்டு முறைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள வளம்குன்றாத கடல் மீன்பிடிபாட்டிற்கான மிகக்குறைந்த தேவைகளுடன் செல்லத்தக்க தாக்குவதற்கு ஒரு உரிய முறையை ஏற்படுத்த வேண்டும். வளம்குன்றாத மீன்வளத்துடன் தொடர்பற்ற வர்த்தகத்திற்கு தேவையற்ற தடைகளை ஏற்படுத்தும் அல்லது பயன்படுத்துவோரை தவறாக வழி நடத்தும் தேவைகள் மற்றும் ஒப்பளகுகளை வரையறைகள் சேர்க்க வில்லை என்பதனை உறுதி செய்தல் செல்லத்தக்க தாக்குதலுக்கு தேவையாகிறது.

## வெளிப்படையான அதிகாரமளித்தலுக்கான வழிமுறைகள்

### நோக்கம்

64. வெளிப்படையான அதிகாரமளித்தல் உறுதி செய்கிறது. வளம் குன்றாத வரையறைகளுடன் மற்றும் மீன்வளத்தில் தேவைகளின் பாதுகாப்புச் சங்கிலியுடன் இணக்கத்திற்கு மேற்கொள்ளப்படும் மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கு பொறுப்பான சான்றிடும் அமைப்புகள் அப்பணிகளை மேற்கொள்வதற்கு தகுதி உடையவை என்பதனை உறுதி செய்கிறது. சான்றிடும் அமைப்பிற்கு வெளிப்படையான அதிகாரமளித்தல் மூலம், வெளிப்படையான அங்கீகாரம் பெற்ற அமைப்புகள் உறுதி வழங்குகின்றன. வளம்குன்றாத தன்மைக்காக நிறுவப்பட்ட வரையறைக்கு இணக்கமான மீன்வளத்திலிருந்து குறிப்பிட்ட மீன் அல்லது மீன் பொருள் பெறப்பட்டது என சான்றிடவும் மற்றும் மதிப்பிடவும் பிந்தையதால் இயலும்.

### குறித்த நிலைக்கு கொண்டு வருதலுக்கான பார்வை

65. வபநி வழிகாட்டி 61. *சான்றிடும்/ பதிவு செய்யும் அமைப்புகளின் மதிப்பீடு மற்றும் வெளிப்படையான அங்கீகாரத்திற்கான பொதுவான தேவைகள்.* 1996.

### பணிகள் மற்றும் அமைப்பு

66. ஒரு முறையின் அடிப்படையில் வெளிப்படையான அங்கீகாரம் மேற்கொள்ளப்படுகிறது. அதற்கு சொந்தமான விதிகள் மற்றும் மேலாண்மை **அதாவது ஒரு வெளிப்படையான அதிகாரமளித்தல்முறை** உள்ளது. வெற்றிகரமான மதிப்பீட்டைத் தொடர்ந்து வெளிப்படையான அங்கீகாரம் வழங்கும் பணி தகுதி வாய்ந்த அங்கீகாரம் அளிக்கும் அமைப்புகளால் மேற்கொள்ளப்பட வேண்டும். தகுதி உடையது என அங்கீகரிக்கப்படுவதற்கும் மற்றும் மதிப்பீட்டை பாகுபாடு அற்ற, நடு நிலைமையில் சரியான முறையில் மேற்கொள்கிறது என்பதை நம்புவதற்காகவும் அங்கீகரிக்கும் அமைப்பு *இதற்கு இடையில்* கீழ்க்கண்ட தேவைகளை நிறைவேற்ற வேண்டும்.

## தேவைகள்

<u>பாரபட்சமற்ற தன்மை</u>

67. அவர்கள் தங்குமிடம் உள்ள நாடுகள் என்பதனை கருத்தில் கொள்ளாது சான்று வழங்கிடும் அனைத்திற்கும் அங்கீகாரம் அளிக்கும் அமைப்பின் சேவை கிடைக்க வேண்டும். விண்ணப்பிக்கும் அமைப்பு அல்லது எந்த ஒரு குழுவில் அல்லது சங்கத்தில் உறுப்பினர் என்ற அளவை நிபந்தனையாகக் கொள்ளாது சேவை கிடைக்க வழி கிடைக்க வேண்டும். ஏற்கனவே அங்கீகாரம் அளித்த சான்றிடும் அமைப்பின் எண்ணிக்கை மீதான நிபந்தனையில் வழி கிடைக்க வேண்டும்.

68. வளரும் நாடுகளில் மற்றும் இடைப்பட்ட நாடுகளில், நிதி, தொழில் நுட்ப உதவி, தொழில் நுட்ப மாற்றம் மற்றும் பயிற்சி மற்றும் விஞ்ஞான பூர்வமான ஒத்துழைப்பு உட்பட்டவற்றிற்கு, சான்றிடும் அமைப்புகளின் தேவைகள் மற்றும் குறிப்பிடத்தக்க சூழ்நிலைகளுக்கு முழுமையான அங்கீகாரம் வழங்கப்படும்.

<u>சார்பு அற்ற நடுநிலையான மற்றும் வெளிப்படையான தன்மை</u>

69. வெளிப்படையான அங்கீகாரம் அளிக்கும் அமைப்பு சார்பு அற்றதாக நடுநிலையுடன் இருத்தல் வேண்டும். சார்பு அற்றதாகவும் நடுநிலையுடன் இருப்பதற்காகவும் வெளிப்படையான அங்கீகாரம் அளிக்கும் அமைப்பு:

- நிறுவன அமைப்பு நிதி மற்றும் பொது அல்லது தனியாரிடமிருந்து பெறப்படும் பிற வகையான உதவிகள் ஆகியவற்றைக் குறித்தவரை வெளிப்படையானத் தன்மை கொண்டிருத்தல்;
- சுயநல ஆர்வங்களில் சார்பற்று, அதன் முதுநிலையில் உள்ள செயல்முறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுடன் இருத்தல்;
- அங்கீகரிக்கும் முறையின் முடிவுகளைத் தாக்கும் எந்த ஒரு வர்த்தகம், நிதி மற்றும் பிற அழுத்தங்கள் ஆகியவற்றிலிருந்து சுதந்திரமாக இருத்தல்;
- மதிப்பீட்டில் பங்கு கொள்ளாத நபரால் (ர்களால்) அதிகாரமளித்தல் மீதான முடிவு எடுக்கப்பட்டது என்பதை உறுதி செய்தல்;
- அனுமதி, நிர்வகித்தல், விரிவாக்குதல், குறைத்தல், தற்காலிகமாக நீக்குதல், வெளியில் உள்ள நபர் அல்லது அமைப்பிற்கு வழங்கப்பட்ட அங்கீகாரத்தை விலக்கிக் கொள்ளுதல் போன்றவற்றிற்கு அதிகாரம் வழங்காதிருத்தல்.

<u>மனித வளம் மற்றும் நிதி ஆதாரங்கள்</u>

70. வெளிப்படையான அதிகாரமளிக்கும் அமைப்பு தேவையான நிதி ஆதாரங்களை மற்றும் நிலைத்த தன்மையை அங்கீகாரம் அளிக்கும் அமைப்பின் இயக்கத்திற்காகப் பெற்று இருக்க வேண்டும். அதன் இயக்கம் மற்றும் அல்லது நடவடிக்கைகளால் ஏற்படும் பொறுப்புகளை ஏற்க உரிய ஏற்பாடுகளை நிர்வகிக்க வேண்டும்.

71. தேவையான கல்வி பயிற்சி, தொழில்நுட்ப அறிவு மற்றும் மீன்வளத்தில் அங்கீகாரம் அளிக்கும் பணிகளை மேற்கொள்வதில் அனுபவம் ஆகியவற்றைக் கொண்ட நபர்களை போதுமான அளவில் அங்கீகரிக்கும் அமைப்பு வேலைக்கு அமர்த்த வேண்டும்.

72. அங்கீகரிக்கும் முறையில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு நபரின் அனுபவம், பயிற்சி மற்றும் தொடர்புடைய தகுதிகளின் மீதான விபரங்கள் அங்கீகாரம் அளிக்கும்

அமைப்பால் நிர்வகிக்கப்படவேண்டும். அன்றைய தேதி வரையில் பயிற்சி மற்றும் அனுபவத்தை பதிவு செய்து வைக்க வேண்டும்.

73. அங்கீகாரம் அளிப்பது தொடர்பான பணிகளை வெளி நபர் அல்லது அமைப்பிற்கு சார் ஒப்பந்தமாக வழங்க அங்கீகரிக்கும் அமைப்பு முடிவு செய்யும் பொழுது அத்தகைய வெளி அமைப்பிற்கான தேவைகள் அங்கீகரிக்கும் அமைப்பின் தேவைகளுக்கு குறைந்தனவையாக இருத்தல் கூடாது. உரியவாறு ஆவணப்படுத்தப்பட்ட ஒப்பந்தம் அல்லது சமமான உடன்படிக்கை ஏற்பாடுகளை அமைக்க வேண்டும். அவற்றுள் இரகசியத் தன்மை மற்றும் ஆர்வங்களில் முரண்பாடு ஆகியவற்றையும் உள்ளடக்க வேண்டும்.

<u>பொறுப்பு உடைமை மற்றும் அறிவிப்பு</u>

74. அங்கீகாரம் அளிக்கும் அமைப்பு சட்டப்படியானதாக இருக்க வேண்டும். அங்கீகாரம் அளிக்கும் முறைக்கு விண்ணப்பங்களைக் கையாள்வதற்கு திறமையான தெளிவான செய்முறைகளையும் கொண்டிருக்க வேண்டும். குறிப்பாக, அங்கீகாரம் அளிக்கும் அமைப்பு கீழ்க்கண்டவற்றை நிர்வகித்து விண்ணப்பதாரர்களுக்கு மற்றும் அங்கீகாரம் அளிப்பவைகளுக்கு வழங்க வேண்டும்:

- மதிப்பீடு மற்றும் அங்கீகாரத்திற்கான முறைகள் பற்றி விரிவான விளக்கம்;
- அங்கீகாரத்திற்கான தேவைகளைக் கொண்ட ஆவணங்கள்;
- அங்கீகாரம் அளிக்கும் அமைப்பின் உரிமைகள் பணிகளை விளக்கும் ஆவணங்கள்.

75. உரியவாறு ஆவணப்படுத்தப்பட்ட ஒப்பந்தம் அல்லது சமமான உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டு அதில் ஒவ்வொரு குழுவின் பொறுப்புகளும் குறிப்பிடப்பட வேண்டும்.

76. அங்கீகாரம் அளிக்கும் அமைப்பு பெற்று இருக்க வேண்டியவை:

- வரையறுக்கப்பட்ட நோக்கங்கள் மற்றும் தரத்திற்கான பொறுப்புகள்;
- தரம் குறித்த கையேட்டில் ஆவணப்படுத்தப்பட்ட தரத்திற்காக செய்முறை மற்றும் அறிவுரைகள்;
- தரத்திற்காக நிறுவப்பட்ட உரிய மற்றும் திறமையான அமைப்பு.

77. அங்கீகாரம் அளிக்கும் அமைப்பு சீரான இடைவெளியில் உள் ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும். அங்கீகார முறை செயல்படுத்தப்பட்டுள்ளதா மற்றும் திறமையாக உள்ளதா என்பதனைச் சரிபார்க்க திட்டமிட்ட மற்றும் முறையான வழியில் அனைத்து முறைகளையும் ஆய்வுகள் சேர்க்க வேண்டும்

78. அங்கீகார அமைப்பு தொடர்புடைய பிரிவுகளில் வெளி ஆய்வுகளையும் பெறும். இந்த ஆய்வின் முடிவுகள் பொதுமக்களுக்கு கிடைக்கும் வழியில் இருக்க வேண்டும்.

79. அங்கீகாரம் அளிக்கும் அமைப்பின் குழுவில் உள்ள தகுதி வாய்ந்த நபர்கள் பொருந்தக்கூடிய அனைத்து அங்கீகாரத் தேவைகளுக்கு எதிராக மதிப்பீடு மேற்கொள்ள அமைப்பால் நியமிக்கப்பட வேண்டும்.

80. மதிப்பீட்டிற்காக நியமிக்கப்பட்ட நபர்கள் அமைப்பிற்கு அவர்கள் மதிப்பிடப்பட்ட அமைப்பின் அனைத்து அங்கீகாரத் தேவைகளுக்கும் இணக்கமாக உள்ளது பற்றி கண்டு பிடித்தவற்றை அறிக்கையாக வழங்க வேண்டும். அறிக்கை கீழ்க்கண்டவற்றைப் போன்ற விரிவான விபரங்களை போதிய அளவில் வழங்க வேண்டும்:

- சந்தித்த பணியாளரின் தகுதி, அனுபவம் மற்றும் அதிகாரம்;
- சேவையில் நம்பிக்கை தர சான்றிடும் அமைப்பு பின்பற்றிய செய்முறைகள் மற்றும் நிறுவனத்தின் உட்புற அமைப்பு போதுமான அளவில் சரியாக இருத்தல்;
- அடையாளம் காணப்பட்ட இணக்க மில்லாதவற்றை சரி செய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பொருந்தும் இடங்களில் முந்தைய மதிப்பீடுகளில் அடையாளம் காணப்பட்டவைகளும் இவற்றுள் அடங்கும்.

81. அங்கீகார அமைப்பு அதன் ஒப்பந்தம் சட்டம் அல்லது பிற கடமைகளுக்கு இணக்கமாக உள்ள காலத்தில் மதிப்பீட்டிற்காக பார்வையிட்ட நேரத்தில் என்ன நடந்தது என்பதற்கான ஆவணங்களை வைத்திருப்பதற்காக முறைகள் மற்றும் கொள்கைகளைக் கொண்டிருக்க வேண்டும். அங்கீகாரத்திற்கான செய்முறைகள் திறமையாக நிறைவேற்றப்பட்டன அதுவும் குறிப்பாக, விண்ணப்பப் படிவங்கள், மதிப்பீட்டு அறிக்கைகள், மற்றும் பிற அனுமதித்தல், நிர்வகித்தல், விரிவு படுத்துதல் குறைத்தல், தற்காலிகமாக நீக்குதல் மற்றும் அங்கீகாரத்தை விலக்கிக் கொள்ளுதல் தொடர்பான ஆவணங்கள் ஆகியவற்றைப் பொறுத்தவரை திறமையாக நிறைவேற்றப்பட்டன என்பதனை ஆவணங்கள் விளக்க வேண்டும். ஆவணங்கள் அடையாளம் காணப்பட வேண்டும். நிர்வகிக்கப்பட வேண்டும். செய்முறையின் நேர்மை மற்றும் விபரங்களின் இரகசியத்தன்மை ஆகியவற்றை உறுதி செய்யும் வழியில் இவை கழித்து ஒதுக்கப்பட வேண்டும்.

<u>சான்று அளிக்கும் அமைப்புகளின் **அதிகாரமளித்தல் குறித்த** புகார்களின் முடிவு</u>[14]

82. சான்று அளிக்கும் அமைப்புகளின் அங்கீகாரம் அல்லது அங்கீகாரத்தை விலக்குதல் ஆகியவற்றின் மீதான எந்த வகை புகார்களைக் கையாள்வதற்கும் செய்முறைகள் மற்றும் எழுதப்பட்ட கொள்கைகளை அங்கீகாரம் அளிக்கும் அமைப்புகள் பெற்று இருக்க வேண்டும்.

83. புகாருக்கு பதில்கொடுக்கும் விதத்தில் உரியவாறு, குறிப்பிட்ட பணிக்கானது என்ற அடிப்படையில் சார்பற்ற மற்றும் நடு நிலையான குழு ஒன்றை நிறுவுவதை செய்முறைகள் உள்ளடக்க வேண்டும். இயன்றவரை, குழு எந்த ஒரு புகாரையும் கலந்துரையாடல் அல்லது இணக்கப்படுத்துதல் மூலமாக முடிவுக்கு கொண்டுவர முயற்சிக்க வேண்டும். இது இயலவில்லை என்றால், குழு அங்கீகரிக்கும் அமைப்பிற்கு எழுத்தில் முடிவை வழங்க வேண்டும். ஈடுபடும் பிற குழு அல்லது குழுவினருக்கு இது ஒப்படைக்கப்படும்.

84. அங்கீகாரம் வழங்கும் அமைப்பு பெற்றிருக்க வேண்டியவை:

அ) அனைத்து புகார்கள் மற்றும் அங்கீகாரம் அளிப்பது தொடர்பான சீர்படுத்தும் நடவடிக்கைகள் ஆகியவற்றைப் பதிவு செய்து வைத்திருத்தல்;

---

[14] பின்வரும் சான்றிதழ் வழங்குவதற்கான வழி முறைகள் என்ற அத்தியாயத்தில் சான்றிடுதல் குறித்த புகார்கள் மற்றும் முறையீடுகளின் முடிவு மீதான அங்கீகரிக்கும் அமைப்பின் செய்முறைகள்.

ஆ) உரிய சரியான மற்றும் முன் எச்சரிக்கை மேற்கொள்ளுதல்;

இ) சீர்படுத்தும் நடவடிக்கைகளின் திறனை மதிப்பிடுதல்;

ஈ) புகார்களை விசாரித்தல் மற்றும் முடிவு செய்தலின் போது பெறப்பட்ட விபரங்களின் இரகசியத் தன்மையைப் பாதுகாத்தல்.

**85.** அங்கீகாரம் குறித்த புகார்களை கையாள்வதற்கான முறைகள் பற்றிய விபரங்கள் பொதுவில் கிடைக்கக் கூடியவையாக இருக்க வேண்டும்.

**86.** தேசீய சட்டம் அல்லது பன்னாட்டு சட்டம் ஆகியவற்றிற்காக வழங்கப்பட்ட பிற சட்ட வகைகள் மற்றும் நிர்வாக முறைகளுக்கு மறுபரிசீலனைகளை மேல் உள்ளவை தடை செய்யாது.

<u>இரகசியத்தன்மை</u>

**87.** அங்கீகாரம் அளிக்கும் அமைப்பு போதிய அளவிற்கு ஏற்பாடுகளைக் கொண்டிருக்க வேண்டும். அதன் நிறுவனத்தில் குழுக்கள் மற்றும் அதன் சார்பாக செயல்படும் வெளி அமைப்புகள் உள்ளிட்ட அனைத்து நிலையிலும் அங்கீகாரமளிக்கும் நடவடிக்கைகளின் பொழுது பெறப்பட்ட விபரங்களின் இரகசியத்தன்மைகளைப் பாதுகாக்க பயன்படுத்தப்படும் சட்டங்களுடன் இணக்கமாக இருத்தல் வேண்டும்.

**88.** மூன்றாவது நபருக்கு விபரங்களை வெளியிடுவதை சட்டப்படியான தேவை என்ற இடங்களில் சட்டம் அனுமதித்தபடி வழங்கப்பட்ட விபரங்களை அமைப்பிற்கு தெரிவிக்க வேண்டும். இல்லையெனில், ஒரு அங்கீகரிக்கும் அமைப்பின் விண்ணப்பதாரரின் விபரத்தை மூன்றாவது நபருக்கு அமைப்பின் எழுத்தில் வழங்கப்படும் சம்மதம் இன்றி வெளியிடுதல் கூடாது.

<u>நிர்வகித்தல் மற்றும் அங்கீகாரத்தை விரிவு படுத்துதல்</u>

**89.** அங்கீகரிக்கும் அமைப்பு அங்கீகரிக்கப்பட்ட சான்று இடும் அமைப்பு அதற்கு அதன் நிலை அல்லது இயக்கத்தில் ஏதேனும் மாற்றங்களை தாமதம் இன்றி தெரிவிப்பதை உறுதி செய்வதற்கு ஏற்பாடுகளைக் கொண்டிருக்க வேண்டும்.

**90.** மாற்றங்கள் ஏற்படும் நிலையில் மறுமதிப்பீடு செய்வதற்கு அங்கீகரிக்கும் அமைப்பு முறைகளைக் கொண்டிருக்க வேண்டும். இந்த மாற்றங்கள் குறிப்பாக அங்கீகரிக்கும் அமைப்பின் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கைகளின் திறமை அல்லது நோக்கத்தை அல்லது இணக்கமாக இருத்தலை அங்கீகரிக்கும் அமைப்பு குறிப்பாக தெரிவித்தபடி தகுதியின் தொடர்புடைய ஏதேனும் பிற ஒப்பளகுடன் பாதிப்பு அடையச் செய்யும்.

**91.** போதிய அளவில் நெருங்கிய இடைவெளியில் அங்கீகாரம் மறுமதிப்பீடு செய்யப்பட வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட சான்றிடும் அமைப்பு அங்கீகரித்தலுக்குத் தேவையானவற்றுடன் தொடர்ந்து இணங்கி இருத்தலை சரிபார்க்க மறு மதிப்பீடு செய்யப்பட வேண்டும். மறு மதிப்பீட்டை மேற்கொள்வதற்கான சீரான இடைவெளி ஐந்து வருடங்களுக்கு மிகைப்படாது இருக்க வேண்டும்.

<u>தற்காலிகமாக நீக்குதல் மற்றும் அதிகாரமளித்தலை விலக்கிக் கொள்ளுதல்</u>

**92.** அங்கீகாரத்தின் முழு நோக்கத்திற்காக அல்லது பகுதிநோக்கத்திற்காக முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அங்கீகாரம் நீக்கப்படலாம் அல்லது

விலக்கிக் கொள்ளப்படலாம். எந்த நிபந்தனையின் கீழ் மேற்கொள்ளப்படும் என்பதனை குறிப்பாக அங்கீகரிக்கும் அமைப்பு தெரிவிக்க வேண்டும்.

<u>அதிகாரமளித்தலின் தேவைகளில் மாற்றம்</u>

**93.** அதிகாரமளித்தலின் தேவைகளில் ஏதேனும் மாற்றம் செய்திட கருதினால் அதற்கான உரிய அறிவிப்பை அங்கீகரிக்கும் அமைப்பு வழங்கிட வேண்டும்.

**94.** மாற்றத்தின் மிகச் சரியான வகை மற்றும் மாற்றத்தை அமுல்படுத்தும் தேதி ஆகியவற்றை தீர்மானிப்பதற்கு முன், ஆர்வமான குழுவினர் வெளிப்படுத்தும் கருத்துக்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும்

**95.** மாற்றப்படும் தேவைகள் மீது முடிவு எடுத்தல் மற்றும் வெளியிடுதலைத் தொடர்ந்து, ஒவ்வொரு அங்கீகரிக்கப்பட்ட அமைப்பும் அத்தகைய கால அளவிற்குள், அங்கீகரிக்கும் அமைப்பின் கருத்திற்குட்பட்டு, அதன் செய்முறைகளில் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் தேவையான சரி செய்தல் நியாயமானதா என்பதனைச் சரிபார்க்க வேண்டும்.

**96.** வளரும் நாடுகள் மற்றும் இடைப்பட்ட நிலையில் உள்ள நாடுகள் ஆகியவற்றில் உள்ள அங்கீகரிக்கும் அமைப்புகளுக்கு தனிப்பட்ட பரிசீலனைகள் வழங்கப்படும்.

<u>அதிகாரமளித்தலின் சின்னம் அல்லது அடையாளம்[15] ஆகியவற்றின் உரிமைதாரர் அல்லது அனுமதி பெற்றவர்</u>

**97.** அங்கீகாரம் வழங்கும் அமைப்பு, ஒரு அடையாளம் அல்லது சின்னத்தின் உரிமைதாரராக அல்லது அனுமதி பெற்றவராக, அதன் அங்கீகரிப்பு திட்டங்களில் அதனைப் பயன்படுத்தக் கருதினால், அதன் பயனை விவரிக்கும் ஆவணப்படுத்தப்படட செய்முறைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

**98.** அங்கீகரிக்கும் சான்றிடும் அமைப்பால் சான்று இடப்பட்ட அங்கீகரிக்கும் அமைப்பால் ஒப்புதல் அளிக்கப்பட்ட அமைப்பு சேவை அல்லது உற்பத்தி பொருள் ஆகிய சம்பந்தப்பட்டவைகளில் எந்த ஒரு வழியிலும் அங்கீகரிக்கும் அமைப்பு அதன் அங்கீகார சின்னத்தை அல்லது அடையாளத்தைப் பயன்படுத்துவதை அனுமதித்தல் கூடாது.

**99.** அங்கீகரிக்கும் முறைக்கு தவறான பார்வைகள் அல்லது விளம்பரங்கள் அட்டவணைகள், போன்றவற்றில் அங்கீகாரச் சின்னங்களை தவறாக வழிநடத்திச் செல்ல பயன்படுத்துதல் ஆகியவற்றைக் கையாள்வதற்கு அங்கீகரிக்கும் அமைப்பு உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

## சான்றிடுதலுக்கான வழிமுறைகள்

### நோக்கம்

**100.** சான்றிடுதல் என்பது ஒரு செய்முறையாகும். இதன் மூலம் மூன்றாவது நபர் எழுத்தில் அல்லது சமமான உறுதியை வழங்குகிறார். தொடர்புடைய வரையறையுடன் மீன்வளம் ஒத்துப்போகிறது, உரிய பாதுகாப்புச் சங்கிலி உரிய இடத்தில் உள்ளது என உறுதி வழங்கப்படுகிறது. வளம்குன்றாத கடல்சார் மீன்வளத்திலிருந்து பெறப்படும் உற்பத்தி பொருட்களுக்கான சூழல் அடையாள

---

[15] சான்றிடும் கோரிக்கை அடையாளம் அல்லது சின்னம் கட்டுப்படுத்துதல் மற்றும் பயன்படுத்துதல் மீதான பகுதிகள் சான்றிடுதலுக்கான வழிகாட்டு முறைகளில் தெரிவிக்கப்படுகிறது.

முத்திரை சீட்டு திட்டத்தின் இன்றியமையாத மற்றும் ஒருங்கிணைந்த பகுதி சான்றிடுதல் ஆகும். குறிப்பிட்ட ஒரு மீன் அல்லது மீன்வளப் பொருள் வளம்குன்றாத மீன்வளத்திற்காக நிறுவப்பட்ட வரையறைகளுடன் இணக்கமான மீன்வளத்திலிருந்து பெறப்படுகிறது என்ற உறுதியை வாங்குபவர்களுக்கும் மற்றும் பயன் படுத்துபவர்களுக்கும் இது வழங்குகிறது. தொடர்புடைய அனைத்து காரணிகளின் நோக்கத்துடன் கூடிய மதிப்பீட்டின் அடிப்படையில் நடுநிலையான சான்றிடுதல், சூழல் அடையாள முத்திரை சீட்டுகள் உண்மையான விபரங்களை தெரிவிப்பதை உறுதி செய்கிறது. சூழல் அடையாள முத்திரை சீட்டு திட்டத்தில் அதன் நோக்கங்களை அடைந்திட இது மிகவும் முக்கியமான நிபந்தனையாகும்.

## நோக்கம்

101. சான்றிடுதல் இருவகையாக உள்ளன. மீன் வளத்திற்கு சான்றிடுதல் மற்றும் மீன் அறுவடை செய்யப்பட்ட நேரத்திலிருந்து மீன் அல்லது மீன்வளப் பொருள் இறுதியாக பயன்படுத்துவோருக்கு விற்கப்படும் நேரம் வரை பாதுகாப்புச் சங்கிலிக்கு சான்றிடுதல் என இருவகைப்படும். மீன்வளம் மற்றும் பாதுகாப்புச் சங்கிலி ஆகிய இரண்டிற்கும் தனித்தனியான சான்றிதழ்கள் வழங்கப்படும்.

102. சான்றிட தேவைப்படும் இருவகையான மதிப்பீடுகள்:
அ) **ஒத்திருத்தலை மதிப்பிடுதல்** வரையறை மற்றும் சான்றிடுதலுடன் தொடர்புடைய ஒப்பளகுகளுடன் மீன்வளம் ஒத்திருக்கிறதா என்பதனை மதிப்பிடுதல்;

ஆ) **பாதுகாப்புச் சங்கிலி மதிப்பிடுதல்** சான்றிடப்பட்ட மீன்வளத்திலிருந்து பெறப்படும் மீனை அடையாளம் காண்பதற்கும் தொடர்ந்து பதப்படுத்துதல் வழங்குதல் மற்றும் விற்பனை செய்தல் ஆகிய நிலைகளில் அடையாளம் காண்பதற்கும் போதிய அளவில் முறைகள் உள்ளனவா என்பதனை மதிப்பிடுதல்.

103. அடையாள முத்திரை சீட்டு வழங்கப்பட்ட மீன் மற்றும் மீன்வளப் பொருட்கள் உபயோகிப்பவர்களுக்கு வளம்குன்றாத மீன்வளத்திலிருந்து அவை பெறப்பட்டதைத் தெரிவிக்க இருவகை மதிப்பீடுகள் மற்றும் சான்றிதழ்களும் தேவைப்படுகின்றன.

## குறித்தநிலைக்கு கொண்டு வருதலுக்கான பார்வைக்குறிப்புகள்

104. வபநி வழிகாட்டி 62, *தர அமைப்புகளின் பதிவு/ சான்றிடுதல் மற்றும் மதிப்பீட்டிற்காக இயங்கும் அமைப்புகளுக்கான பொதுவான தேவைகள்*. 1996.

105. வபநி/ IEC வழிகாட்டி 65, *உற்பத்தி பொருட்களுக்கு சான்று இடும் அமைப்புகளுக்காக இயங்கும் அமைப்புகளுக்கான பொதுவான தேவைகள்*. 1996.

106. உவநி. வர்த்தகத்திற்கு தொழில் நுட்ப தடைகள் மீதான ஒப்பந்தம், கட்டுரை 5.

## பணிகள் மற்றும் அமைப்பு

107. ஒத்திருத்தல் மற்றும் பாதுகாப்புச் சங்கிலி மதிப்பீட்டு பணிகள் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட சான்றிடும் அமைப்புகள் மூலமாக நிறைவேற்றப்பட வேண்டும். தகுதி உடையது மற்றும் வேறுபாடின்றி நடுநிலையில் மற்றும் சரியான முறையில் மதிப்பீடுகளை மேற்கொள்வது நம்பத்தகுந்தது என்பனவற்றில் அங்கீகாரம் பெற சான்றிடும் அமைப்பு *இதற்கிடையில்* கீழ்க்கண்ட தேவைகளை நிறைவேற்ற வேண்டும்.

## தேவைகள்

சார்பற்ற தன்மை மற்றும் நடுநிலைமை

108. சூழல் அடையாள முத்திரை சீட்டு திட்டத்தின் உரிமையாளரிடமிருந்து, நிதி மற்றும் சட்டப்படி சான்றிடும் அமைப்பு சார்பற்று இருக்க வேண்டும்.

109. சான்றிடும் அமைப்பு மற்றும் அதன் மதிப்பீடுகள் சான்றிடும் அமைப்பில் நேரடியாகவோ அல்லது அதன் சார் ஒப்பந்தத்தின் மூலமாகவோ பணியமர்த்தப்பட்ட சான்றிடும் பணியாளர்கள் அதன் சான்றிடும் பணிக்கு தேவையானவற்றைத் தவிர வர்த்தகம் நிதி மற்றும் மதிப்பிடப்படும் மீன்வளத்தில் அல்லது பாதுகாப்புச் சங்கிலியில் பிறவற்றில் எந்த ஒரு ஆர்வமும் கொண்டிருத்தல் கூடாது.

110. வெவ்வேறு நபர்கள் சான்றிடும் முடிவை மற்றும் சான்றிடுதலுக்கான மதிப்பீடுகளை மேற்கொண்டனர் என்பதை சான்றிடும் அமைப்பு உறுதி செய்ய வேண்டும்

111. வெளி நபர் அல்லது அமைப்பிற்கு சான்றிடுதலை அனுமதித்தல், நிர்வகித்தல் விரிவுபடுத்துதல், நீக்கம் செய்தல் மற்றும் விலக்கிக் கொள்ளுதல் ஆகியவற்றிற்கு சான்றிடும் அமைப்பு அங்கீகாரம் வழங்குதல் கூடாது.

பாரபட்ச மற்ற தன்மை

112. மண்டலம், அரசு, அரசுக்குச் சொந்தமான கழகங்கள் அல்லது அரசு சாரா மீன்வள மேலாண்மை நிறுவனங்கள் அல்லது ஏற்பாடுகள் ஆகியவற்றால் நிர்வகிக்கப்படும் அனைத்து வகை மீன்வளங்களுக்கும் சான்றிடும் அமைப்பின் சேவை கிடைப்பதற்கு திறந்த வழி இருக்க வேண்டும். சான்றிடுதலுக்கான வழி பெறுவதற்கு மீன்வளத்தின் அளவு அல்லது வடிவம் போன்ற நிபந்தனைகள் இருத்தல் கூடாது. ஏற்கனவே சான்று இடப்பட்ட மீன்வளத்தின் எண்ணிக்கையும் நிபந்தனையாக இருத்தல் கூடாது.

மனிதவளம் மற்றும் நிதி ஆதாரங்கள்

113. சான்றிடும் அமைப்பிற்கு போதிய நிதி ஆதாரம் இருக்க வேண்டும். சான்றிடும் முறையை இயக்குவதற்கு நிலைத்த தன்மை இருக்க வேண்டும். அதன் இயக்கங்கள் மற்றும்/ அல்லது நடவடிக்கைகளால் ஏற்படும் பொறுப்புகளை கவனிக்க உரிய ஏற்பாடுகளை நிர்வகிக்க வேண்டும்.

114. தேவையான கல்வி, பயிற்சி, தொழில்நுட்ப அறிவு மற்றும் மீன்வளத்தில் இணக்கம் மற்றும்/ அல்லது பாதுகாப்புச் சங்கிலி மதிப்பீடுகளை மேற்கொள்வதில் அனுபவம் ஆகியவற்றைக் கொண்ட நபர்களை போதுமான அளவில் சான்றிடும் அமைப்பு வேலைக்கு அமர்த்த வேண்டும்.

115. சான்று அளிக்கும் முறையில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு நபரின் அனுபவம், பயிற்சி மற்றும் தொடர்புடைய தகுதிகளின் மீதான விபரங்கள் சான்றிடும் அமைப்பால் நிர்வகிக்கப்பட வேண்டும். அன்றைய தேதி வரை பயிற்சி மற்றும் அனுபவத்தை பதிவு செய்து வைக்க வேண்டும்.

116. சான்று அளிப்பது தொடர்பான பணிகளை வெளிநபர் அல்லது அமைப்பிற்கு சார் ஒப்பந்தமாக வழங்க சான்று வழங்கும் அமைப்பு முடிவு செய்யும் பொழுது அத்தகைய வெளி அமைப்பிற்கான தேவைகள் சான்றிடும் அமைப்பின் தேவைகளுக்கு குறைந்தனவையாக இருத்தல் கூடாது. உரியவாறு ஆவணப்படுத்தப்பட்ட ஒப்பந்தம்

அல்லது சமமான உடன்படிக்கை ஏற்பாடுகளை அமைக்க வேண்டும். அவற்றுள் இரகசியத்தன்மை மற்றும் ஆர்வங்களில் முரண்பாடு ஆகியவற்றையும் உள்ளடக்க வேண்டும்.

<u>பொறுப்பு உடைமை மற்றும் அறிவிப்பு</u>

**117.** சான்றிடும் அமைப்பு சட்டப்படியானதாக இருக்க வேண்டும். சான்று அளிக்கும் முறைக்கு விண்ணப்பங்களைக் கையாள்வதற்கு திறமையான தெளிவான செய்முறைகளையும் கொண்டிருக்க வேண்டும். குறிப்பாக சான்று அளிக்கும் அமைப்பு கீழ்க்கண்டவற்றை நிர்வகித்து விண்ணப்பதாரர்களுக்கு மற்றும் அங்கீகாரம் அளிப்பவைகளுக்கு வழங்க வேண்டும்:

– மதிப்பீடு மற்றும் சான்றிடுதலுக்கான முறைகள் பற்றி விரிவான விளக்கம்;

– சான்றிடுதலுக்கான தேவைகளைக் கொண்ட ஆவணங்கள்;

– சான்று அளிக்கும் அமைப்பின் உரிமைகள் பணிகளை விளக்கும் ஆவணங்கள்.

**118.** உரியவாறு ஆவணப்படுத்தப்பட்ட ஒப்பந்தம் அல்லது சமமான உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டு அதில் ஒவ்வொரு குழுவின் பொறுப்புகளும் குறிப்பிடப்பட வேண்டும்.

**119.** சான்று அளிக்கும் அமைப்பு பெற்று இருக்க வேண்டியது:

– வரையறுக்கப்பட்ட நோக்கங்கள் மற்றும் தரத்திற்கான பொறுப்புகள்;

– தரம்குறித்த கையேட்டில் ஆவணப்படுத்தப்பட்ட தரத்திற்காக செய்முறை மற்றும் அறிவுரைகள்;

– தரத்திற்காக நிறுவப்பட்ட உரிய மற்றும் திறமையான அமைப்பு.

**120.** சான்று அளிக்கும் அமைப்பு சீரான இடைவெளியில் உள் ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும். சான்று அளிக்கும் முறை செயல்படுத்தப்பட்டுள்ளதா மற்றும் திறமையாக உள்ளதா என்பதனைச் சரிபார்க்க திட்டமிட்ட மற்றும் முறையான வழியில் அனைத்து முறைகளையும் ஆய்வுகள் சேர்க்க வேண்டும்.

**121.** சான்று இடும் அமைப்பு தொடர்புடைய பிரிவுகளில் வெளி ஆய்வுகளையும் பெறும். இந்த ஆய்வின் முடிவுகள் பொது மக்களுக்கு கிடைக்கும் வழியில் இருக்க வேண்டும்.

**122.** சான்று இடும் அமைப்பு அதன் ஒப்பந்தம் சட்டம் அல்லது பிற கடமைகளுக்கு இணக்கமாக உள்ள காலத்தின் ஆவணங்களை வைத்திருப்பதற்காக முறைகள் மற்றும் கொள்கைகளைக் கொண்டிருக்க வேண்டும். சான்றிடும் முறைகள் திறமையாக நிறை வேற்றப்பட்டன என்பதனை இவை விளக்க வேண்டும். அதுவும் குறிப்பாக விண்ணப்பப்படிவங்கள், மதிப்பீட்டு அறிக்கைகள் மற்றும் பிற அனுமதித்தல் நிர்வகித்தல், விரிவு படுத்துதல், தற்காலிகமாக நீக்குதல் மற்றும் சான்றை விலக்கிக் கொள்ளுதல் ஆகியவற்றைப் பொறுத்தவரை திறமையாக நிறைவேற்றப்பட்டன என்பதனை விளக்க வேண்டும். ஆவணங்கள் அடையாளம் காணப்பட வேண்டும். நிர்வகிக்கப்பட வேண்டும். செய்முறையின் நேர்மை மற்றும் விபரங்களின் இரகசியத்தன்மை ஆகியவற்றை உறுதி செய்யும் வழியில் இவை கழித்து ஒதுக்கப்பட வேண்டும்.

123. மாற்றங்கள் எனில், பாதிக்கப்படும் அனைத்து குழுவினருக்கும் அறிவிக்கப்படும் என்பதனை சான்றிடும் அமைப்பு உறுதி செய்யும்.

124. கேட்கப்படும் பொழுது உரிய ஆவணங்கள் அனைத்தும் கிடைக்கக் கூடியதாக இருக்கும் என்பதனை சான்று இடும் அமைப்பு உறுதி செய்ய வேண்டும்.

<u>சான்றிடுதலுக்கான கட்டணங்கள்</u>

125. சான்றிடும் அமைப்பு விண்ணப்பதாரர்கள் மற்றும் சான்றிடும் மீன்வளங்களுக்கான கட்டண விகிதத்தை எழுத்தில் நிர்வகிக்க வேண்டும். கேட்கப்படும் பொழுது கிடைக்கக் கூடியதாக இருக்க வேண்டும். கட்டண விகிதத்தை நிறுவுதல் மற்றும் சான்றிடும் மதிப்பீட்டிற்கு குறிப்பிட்ட கட்டணத்தைத் தீர்மானித்தல் ஆகியவற்றில், சான்றிடும் அமைப்பு, *இதற்கு இடையில்* சரியான மற்றும் உண்மையான மதிப்பீட்டிற்கான தேவைகள், அளவு, பரிணாமம், மீன்வளம் மற்றும் பாதுகாப்புச் சங்கிலியின் சிக்கல், எந்த வாடிக்கையாளருடனும் பாரபட்சம் இல்லாதிருக்கும் தேவை, மற்றும் வளரும் நாடுகள் மற்றும் இடைப்பட்ட நிலையில் உள்ள நாடுகளின் தனித்த சூழ்நிலை மற்றும் தேவைகள் ஆகியவற்றைக் கணக்கில் கொள்ள வேண்டும்.

<u>இரகசியத்தன்மை</u>

126. சான்றிடும் அமைப்பு, போதிய அளவிற்கு ஏற்பாடுகளைக் கொண்டிருக்க வேண்டும். சான்றிடும் நடவடிக்கைகளின் பொழுது அமைப்பின் அனைத்து நிலைகளிலும் பெறப்பட்ட விபரங்களின் இரகசியத்தன்மைகளைப் பாதுகாக்கப் பயன்படுத்தப்படும் சட்டங்களுடன் இணக்கமாக இருத்தல் வேண்டும்.

127. மூன்றாவது நபருக்கு விபரங்களை வெளியிடுவது சட்டப்படியான தேவை என்ற இடங்களில் சட்டம் அனுமதித்தபடி வழங்கப்பட்ட விபரங்களை வாடிக்கையாளருக்கு தெரிவிக்க வேண்டும். இல்லையெனில், குறிப்பிட்ட உற்பத்திப் பொருள் அல்லது மீன்வளத்தின் விபரத்தை மூன்றாவது நபருக்கு வாடிக்கையாளரின் எழுத்தில் வழங்கப்படும் சம்மதம் இன்றி வெளிடுதல் கூடாது.

<u>சான்றிடுதலை நிர்வகித்தல்</u>

128. சான்றிடும் அமைப்பு தகுந்த கால முறைப்படி நெருங்கிய இடைவெளியில் கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பை மேற்கொள்ள வேண்டும். சான்றிடப்பட்டுள்ள மீன்வளங்கள் மற்றும்/ அல்லது சான்றிடப்பட்ட பாதுகாப்புச் சங்கிலிகள் தொடர்ந்து சான்றிடுதலுக்கான தேவைகளுக்கு இணக்கமாக இருத்தலை சரிபார்ப்பதற்காக கண்காணிப்பு மேற்கொள்ள வேண்டும்.

129. மீன்வளத்தின் மேலாண்மை அல்லது பாதுகாப்புச் சங்கிலி அல்லது இணக்கத்தைப் பாதிக்கும் பிற மாற்றங்கள் ஆகியவற்றில் மாற்றம் நிகழ்த்த கருதும் பொழுது வாடிக்கையாளர் உடனடியாக அதனை சான்றிடும் அமைப்பிற்கு தெரிவிக்க வேண்டும்.

130. சான்று இடப்பட்ட மீன்வளம், அல்லது பாதுகாப்புச் சங்கிலி ஆகியவற்றின் நிலை மற்றும் மேலாண்மையைப் பாதிக்கும் மாற்றங்கள் ஏற்படும் பொழுது மற்றும் சான்று இடப்பட்ட மீன்வளம் அல்லது/ மற்றும் பாதுகாப்புச் சங்கிலி சான்றிடும் அமைப்பின் தொடர்புடைய தேவைகள் மற்றும்/ அல்லது தேவையான வரையறைகளுடன் இணக்கமாக இல்லை என்பதனைத் தெரிவிக்கும் எந்த ஒரு பிற விபரம் அல்லது

புகாரை ஆய்வு செய்யும் பொழுது மறு மதிப்பீடுகளை மேற்கொள்ள சான்றிடும் அமைப்பு முறைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

131. மீன்வளத்திற்கு ஐந்து ஆண்டுகள் மற்றும் பாதுகாப்பு சங்கிலிக்கு மூன்று ஆண்டு காலத்திற்கு மேற்படாத வகையில் செல்லத்தக்கதாக சான்றிதழ் இருக்க வேண்டும். மீண்டும் சான்றிட தேவைப்படும் மதிப்பீடு ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மீது தனிக் கவனம் செலுத்த வேண்டும். இந்த மாற்றங்கள் மீன்வளத்தை மேற்கொள்வதில் அல்லது மேலாண்மை முறைகளில் மற்றும் தேவைப்படும் வரையறைகளை மாற்றம் செய்யும் புதிய நிபந்தனைகள் ஆகியவற்றில் ஏற்பட்டிருக்கும்.

<u>சான்றிதழைப் புதுப்பித்தல்</u>

132. முந்தைய வழக்கமான கண்காணிப்பு மற்றும் ஆய்வுப் பயிற்சிகள் மற்றும் முழுமையான மறு மதிப்பீடு ஆகியவற்றின் அடிப்படையில் சான்றிதழின் செல்லத்தக்க காலம் புதுப்பிக்கப்படலாம். மீன்வளத்தில் ஐந்து ஆண்டுகள் மற்றும் பாதுகாப்புச் சங்கிலியில் மூன்று ஆண்டுகள் என்ற கால கட்டுப்பாட்டிற்குள் புதுப்பிக்கப்படலாம்.

<u>தற்காலிக நீக்கம் மற்றும் சான்றிதழை விலக்கிக் கொள்ளுதல்</u>

133. சான்றிதழின் முழுமையான அல்லது பகுதியான நோக்கத்திற்காக முழுமையாக அல்லது பகுதியாக சான்றிதழ் எந்த காரணத்தால் தற்காலிகமாக நீக்கப்பட்டது அல்லது விலக்கிக் கொள்ளப்பட்டது என்பதனைச் சான்றிடும் அமைப்பு தெரிவிக்க வேண்டும்.

134. சான்றிதழ் தற்காலிகமாக நீக்கப்பட்ட சான்றிடப்பட்ட மீன்வளம் மற்றும் / அல்லது பாதுகாப்புச் சங்கிலி அல்லது விலக்கிக் கொள்ளப்பட்ட( தீர்மானித்திருப்பினும்) அதற்கு ஏதேனும் குறிப்பு பெற்றுள்ள அனைத்து விளம்பரப்படுத்தும் பொருட்களைப் பயன்படுத்துவதை நிறுத்திவிட வேண்டும். சான்றிடும் அமைப்பு கோரியவாறு சான்றிடும் ஆவணங்களைத் திருப்பித் தர வேண்டும். மேல் முறையீடு செய்முறைகள் முடிந்த பின் விலக்கிக் கொள்ளுதல் அல்லது தற்காலிக நீக்கம் பற்றி பொதுமக்களுக்கு அறிவிப்பது சான்றிடும் அமைப்பின் பொறுப்பாகும்.

<u>பாதுகாப்புச் சங்கிலியை நிர்வகித்தல்</u>

135. மாற்றலின் முக்கிய இடங்களில் பாதுகாப்புச் சங்கிலி செய்முறைகள் செயல்படுத்தப்படுகின்றன. மாற்றலின்ஒவ்வொரு பகுதியிலும், வர்த்தகப்படுத்தப்படும் மீன் அல்லது மீன் பொருட்களின் வகைக்குத் தகுந்தவாறு மாறுபடும் எனினும், சான்றிடப்படும் அனைத்து மீன் அல்லது மீன்வளப் பொருட்கள் அடையாளம் காணப்பட வேண்டும் மற்றும்/ அல்லது சான்றிடப்படாத மீன் அல்லது மீன் பொருட்களிலிருந்து பிரித்து வைக்கப்பட வேண்டும்.

136. சான்று இடப்பட்ட மீன் அல்லது மீன் பொருட்களை பெறுபவர் கப்பலுக்கு ஏற்றி அனுப்புதல், பெறுதல் மற்றும் பட்டியல் தொடர்பான அனைத்து குறிப்புகள் உள்ளிட்ட பாதுகாப்புச் சங்கிலியைச் சார்ந்த ஆவணங்களை நிர்வகிக்க வேண்டும்.

137. ஆய்வு முறைகள் மற்றும் ஆய்வுகளுக்கு இடையேயான கால இடைவெளி ஆகியவற்றை வரையறுக்கும் ஆவணப்படுத்தப்பட்ட முறைகளை சான்றிடும் அமைப்பு பெற்று இருக்க வேண்டும். ஆய்வுகளுக்கு இடையேயான கால இடைவெளி கீழ்க்கண்டவற்றைப் பொறுத்து இருக்கும்:

- மாற்றும் இடத்தில் மேற்கொள்ளப்படும் தொழில்நுட்ப செய்முறைகள்;
- சான்றிடப்பட்டு வெளிப்படும் பொருளின் மதிப்பு மற்றும் அளவு போன்ற இடர்தரும் காரணிகள்.

**138.** ஆய்வு/ சோதனையின் பொழுது பாதுகாப்புச் சங்கிலியில் அடையாளம் காணப்படும் எந்த ஒரு மீறல் அல்லது மீறல் தோற்றம் தெளிவாக கீழ்க்கண்டவற்றுடன் சோதனை/ ஆய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட வேண்டும்:

- மீறல் நடைபெற அனுமதித்த காரணிகளின் விபரம்;
- இத்தகைய மீறல் மீண்டும் நடைபெறாது என்பதனை உறுதி செய்வதற்காக தேவைப்படும் அல்லது மேற்கொள்ளப்பட்ட சரியான நடவடிக்கைகளின் விபரம்.

**139.** ஆய்வு/ சோதனை ஆவணங்கள் அனைத்தையும் சேர்த்து ஆய்வு/ சோதனை அறிக்கை எழுதப்பட வேண்டும். அது தொடர்புடைய குழுக்களுக்கு கிடைக்கக் கூடியதாக இருக்க வேண்டும். சான்றிடும் அமைப்பு அலுவலகத்தில் கோப்பிடப்பட வேண்டும்.

**140.** குறைந்தது கீழ்க்கண்டவற்றையேனும் சோதனை/ ஆய்வு அறிக்கை கொண்டிருக்க வேண்டும்:

- சோதனை/ ஆய்வு மேற்கொள்ளப்பட்ட தேதி;
- அறிக்கைக்கு பொறுப்பான நபர்(களின்) பெயர்(கள்) ;
- சோதனை/ ஆய்வு மேற்கொள்ளப்பட்ட இடங்களின் பெயர் மற்றும் முகவரிகள்;
- சோதனை/ ஆய்வு அறிக்கையின் நோக்கம்;
- பாதுகாப்புச் சங்கிலி தேவைகளுக்கு வாடிக்கையாளரின் இணக்கம் மீதான கருத்துரைகள்.

<u>சான்றிடுதலின் உரிமை, சின்னம் அல்லது அடையாளத்தின் உபயோகம் மற்றும் கட்டுப்பாடு</u>

**141.** சான்றிடும் அமைப்பு, அங்கீகரிக்கும் அமைப்பு அல்லது சூழல் அடையாள முத்திரை சீட்டு திட்டத்தின் உரிமையாளர் ஆகியோர் ஆவணப்படுத்தப்பட்ட செய்முறைகளைக் கொண்டிருக்க வேண்டும். அவை ஒரு மீன் அல்லது மீன்பொருள் வளம்குன்றாத மீன்வளத்திலிருந்து பெறப்பட்டது என்பதனைத் தெரிவிக்கும் அடையாளம் அல்லது சின்னத்தின் பயன்பாட்டின் தேவைகள் தடைகள் அல்லது கட்டுப்பாடுகளைக் குறிப்பிடும். குறிப்பாக, வளம்குன்றாத மீன்வளத்திற்காக வர்த்தகத்திற்கு தடைகளை ஏற்படுத்துதல் அல்லது உபயோகிப்பாளரை தவறாக வழி நடத்துதல் போன்றவற்றிற்கு தொடர்பு ஏதுமில்லாத உரிமைகளுடன் சின்னங்கள் மற்றும் அடையாளங்கள் தொடர்பு படுத்தாது என்பதனை உறுதி செய்வது சூழல் அடையாள முத்திரை சீட்டு திட்டத்திற்கு தேவைப்படுகிறது.

**142.** சான்றிடும் அமைப்பு, அங்கீகரிக்கும் அமைப்பு அல்லது சூழல் அடையாள முத்திரை சீட்டு திட்டத்தின் உரிமையாளர் ஆகியோர் அவற்றின் குறி/ உரிமை/ அடையாளம் ஆகியவற்றை இடுவதற்கு ஏதும் உரிமம் வழங்குதல் கூடாது. அதனைப்

பெற்றிருக்கும் உற்பத்தி பொருள் உண்மையிலேயே சான்றிடப்பட்ட ஆதாரங்களிலிருந்து பெறப்பட்டது என உறுதி செய்யப்படும் வரை மீன் அல்லது மீன் பொருட்களுக்கு எந்த சான்றிதழும் வழங்குதல் கூடாது.

143. சான்றிடும் அமைப்பு, அங்கீகரிக்கும் அமைப்பு அல்லது சூழல் அடையாள முத்திரை சீட்டு திட்டத்தின் உரிமையாளர் ஆகியோர் அவற்றின் சான்று குறி மற்றும் அடையாளம் ஆகியவற்றைப் பயன்படுத்தி வெளிப்படுத்தி தவறுதலாக வழிநடத்தும் அல்லது மோசடியான பயன்பாடு ஏதும் நடைபெறாது இருக்க பொறுப்பேற்க வேண்டும்.

144. சான்றிடும் அமைப்பு, அங்கீகரிக்கும் அமைப்பு அல்லது சூழல் அடையாள முத்திரை சீட்டு திட்டத்தின் உரிமையாளர் ஆகியோர் அடையாளம் அல்லது சின்னத்தை பயன்படுத்தும் உரிமையை சான்றைத் தெரிவிக்க வழங்குவர். அவ்வாறு எனில், மீன்வளம் அல்லது ஏதேனும் மீன் அல்லது மீன்பொருள் அத்தகைய மீன்வளத்திலிருந்து பெறப்படுவது குறிப்பிட்ட அடையாளம் அல்லது சின்னத்தை, அதனால் எழுத்தில் அங்கீகரிக்கப் பட்டிருந்தால் மட்டுமே பயன்படுத்தலாம்.

145. சான்றிடும் அமைப்பு அங்கீகரிக்கும் அமைப்பு அல்லது சூழல் அடையாள முத்திரை சீட்டு திட்டத்தின் உரிமையாளர் ஆகியோர் சான்றிடும் அமைப்பிற்கு தவறான பார்வைகள் அல்லது விளம்பரங்கள் அட்டவணைகள் போன்றவற்றில் காணப்படும் அடையாளம் மற்றும் சின்னங்களை பயன்படுத்தி தவறாக வழி நடத்துதல் ஆகியவற்றைக் கையாள உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

146. வழங்கப்படும் அனைத்து சான்றிதழ்களும் சேர்த்துக் கொள்ள வேண்டியவை:

– அங்கீகரிக்கும் அமைப்பு, அல்லது சூழல் அடையாள முத்திரை சீட்டு திட்டத்தின் உரிமையாளர் பெயர் மற்றும் முகவரி;
– சான்றிடும் அமைப்பின் பெயர் மற்றும் முகவரி;
– சான்றிதழைப் பெற்றிருக்கும் நபரின் பெயர் மற்றும் முகவரி;
– வழங்கப்பட்ட சான்றிதழ் பயன் விளைவிக்கக் கூடிய தேதி;
– சான்றிதழின் பொருள்;
– சான்றிதழ் செல்லத்தக்க கால அளவு;
– வழங்கும் அலுவலரின் கையொப்பம்.

**புகார்கள் மற்றும் முறையீடுகளின் முடிவு**

147. சான்றிடுதல் அல்லது சான்றிதழை விலக்கி கொள்ளுதல் ஆகியவற்றின் எந்த ஒரு பிரிவிற்கும் தொடர்பான புகார்கள் மற்றும் முறையீடுகள் ஈடுபட்டுள்ள குழுவினரிடமிருந்து பெறப்படுவதைக் கையாள அங்கீகரிக்கப்பட்ட சான்றிடும் அமைப்புகள் பயன்படுத்துவதற்காக கொள்கைகள் மற்றும் செய்முறைகளை எழுத்தில் அங்கீகரிக்கும் அமைப்பு அல்லது சூழல் அடையாள முத்திரை சீட்டு திட்டத்தின் உரிமையாளர் பெற்றிருப்பர். அத்தகைய முறைகள் பரிசீலிக்கப்படும் முறையீடுகளின் தன்மை மற்றும் நோக்கத்தை உரிய காலத்தில் தெளிவாக வரையறுக்கும். மதிப்பீட்டின் பொழுது கலந்துரையாடிய அல்லது ஈடுபட்ட குழுவினர்களுக்கு மட்டுமே இவை காண்பிக்கப்படும். முறையீடுகளுக்கான கட்டணத்தை விண்ணப்பதாரரே ஏற்று கொள்ள வேண்டும்.

148. எந்த ஒரு புகாருக்கும் பதில் தர சார்பற்ற மற்றும் நடுநிலையான குழு ஒன்றை இச்செய்முறைகள் உள்ளடக்கும். இயன்றவரை, குழு கலந்துரையாடல் அல்லது சமரசம் செய்தல் மூலமாக எந்த ஒரு புகாரையும் முடிவு செய்ய முயற்சிக்கும். இது இயலவில்லை என்றால், குழு அறிந்ததை எழுத்தில் சான்றிடும் அமைப்பு, அங்கீகரிக்கும் அமைப்பு அல்லது சூழல் அடையாள முத்திரை சீட்டு திட்டத்தின் உரிமையாளர் ஆகியோருக்கு உரியவாறு வழங்கும். ஈடுபடும் குழு அல்லது குழுவிற்கு இது ஒப்படைக்கப்படும்.


149. தேசீய சட்டம் அல்லது பன்னாட்டு சட்டம் ஆகியவற்றை வழங்கப்பட்ட பிற சட்ட வகைகள் மற்றும் நிர்வாக முறைகளுக்கு மறு பரிசீலனைகளை மேலே உள்ளவை தடை செய்யாது.

<u>சான்றிடுதல் குறித்த புகார்கள் மற்றும் முறையீடுகள் மீதான பதிவுகளை வைத்திருத்தல்</u>

150. சான்றிடும் அமைப்பு, அங்கீகரிக்கும் அமைப்பு அல்லது சூழல் அடையாள முத்திரை சீட்டு திட்டத்தின் உரிமையாளர் அல்லது மேம்படுத்துபவர் மேற்கொள்ள வேண்டியவை:

- அனைத்து புகார்கள் மற்றும் முறையீடுகள் மற்றும் சான்றிடுதல் தொடர்பான சீர்படுத்தும் நடவடிக்கை ஆகியவை பற்றிய ஆவணங்கள் வைத்திருத்தல்;
- உரிய சரியான மற்றும் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளுதல்;
- சீர்படுத்தும் நடவடிக்கைகளின் திறமையை மதிப்பிடுதல்;
- சான்றிடுதல் தொடர்பான புகார்கள் மற்றும் முறையீடுகளை விசாரித்தல் மற்றும் முடிவு செய்தலின் போது பெறப்பட்ட விபரங்களின் இரகசியத் தன்மையைப் பாதுகாத்தல்.

151. சான்றிடுதல் தொடர்பான புகார்கள் மற்றும் முறையீடுகளை கையாள்வதற்கான முறைகள் பற்றிய விபரங்கள் பொதுவில் கிடைக்கக் கூடியவையாக இருக்க வேண்டும்.



மீன்வளத்தில் கடல் மீன்பிடிபாட்டிலிருந்து பெறப்படும் மீன் மற்றும் மீன் பொருட்களுக்கு சூழல் அடையாள முத்திரை சீட்டு வழங்குவதற்கான வழிகாட்டு முறைகள் தன்னார்வமான தன்மை உடையது. சூழல் அடையாள முத்திரை சீட்டு திட்டங்களுக்கு பயன்படுத்தப்படக் கூடியது. நன்கு நிர்வகிக்கப்படும் மீன்வளத்தில் கடல் மீன்பிடி பாட்டிலிருந்து பெறப்படும் பொருட்களுக்கு முத்திரை சீட்டை மேம்படுத்தவும் மற்றும் சான்றிடுவதற்கும் ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டவை. மீன்வள ஆதாரங்களை வளம்குன்றாத வகையில் பயன்படுத்துவது தொடர்பான பிரச்சினைகளை மையப்படுத்துபவை. கொள்கைகள் பொதுவான பரிசீலனைகள், வரையறைகள் மற்றும் நிபந்தனைகள் குறைந்தபட்ச உண்மையான தேவைகள் மற்றும் ஒப்பளகுகள் மீன்வளத்தில் கடல் மீன்பிடிபாட்டிலிருந்து பெறப்படும் மீன் பொருட்களுக்கு சூழல் அடையாள முத்திரை சீட்டு வழங்குவதற்கான செய்முறைகள் மற்றும் நிறுவன வகைகள் ஆகியவற்றை இந்த வழிகாட்டு முறைகள் குறிப்பிடும்.

ISBN 92-5-005370-3

9 789250 053707

TC/M/A0116Tri/3/07.06/1000

*Translated and Printed by the Bay of Bengal Programme*
*Inter-Governmental Organisation*
*2009*